வருடாந்த செயற்திறன் அறிக்கை

2021



ஏற்றுமதி விவசாயத் திணைக்களம்

கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட
சிறுபயிர்ச்செய்கை அபிவிருத்தி, அவை சார்ந்த தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாடு

பெருந்தோட்டக் அமைச்சு

2021

වාර්ෂික කාර්යසාධන වාර්තාව
வருடாந்த செயற்திறன் அறிக்கை
ANNUAL PERFORMANCE REPORT

අපනයන කෘෂිකර්ම දෙපාර්තමේන්තුව
ஏற்றுமதி விவசாயத் திணைக்களம்
DEPARTMENT OF EXPORT AGRICULTURE

උක්, බඩඉරිඟු, කජු, ගම්මිරිස්, කුරුඳු, කරාබුනැට්, බුලත් ඇතුළු
කුඩා වැවිලි භෝග වගා සංවර්ධනය, ආශ්‍රිත කර්මාන්ත හා
අපනයන ප්‍රවර්ධන රාජ්‍ය අමාත්‍යාංශය

கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை
உள்ளிட்ட சிறுபயிர்ச்செய்கை அபிவிருத்தி, அவை சார்ந்த தொழில்கள்
மற்றும் ஏற்றுமதி மேம்பாடு

State Ministry of Development of Minor Crops including Sugarcane, Maize, Cashew, Pepper, Cinnamon, Cloves, Betel Related Industries and Export Promotion

වැවිලි අමාත්‍යාංශය
பெருந்தோட்டக் அமைச்சு
Ministry of Plantation

உள்ளடக்கம்

	பக்கம்
01. அத்தியாயம் - நிறுவனத்தின் விபரம் /நிறைவேற்றுப் பொழிப்பு	05
1.1. அறிமுகம்	05-06
1.2. நிறுவனத்தின் இலக்கு, செயற்பணி, நோக்கம்	07
1.3. பிரதான செயற்பாடுகள்	08
1.4. நிறுவன ஒழுங்கமைப்பு	09
1.5. திணைக்களத்தின் பிரதான அலகுகள் மற்றும் நிறுவனங்கள்	10
1.5.1. திணைக்களத்தின் பிரதான அலகுகள்	10
1.5.2 மாவட்ட பணிமனைகள்	10
02. அத்தியாயம் - முன்னேற்ற மற்றும் எதிர்கால கண்ணோட்டம்	11
2.1 சிறப்புச் சாதனைகள் மற்றும் அவற்றினை அடைந்து கொள்ளல்.	11-20
2.2. சவால்கள் மற்றும் எதிர்கால இலக்கு	20
2.2.1 சவால்கள்	20-21
2.2.2 எதிர்கால இலக்குகள் நோக்கங்கள்	21-23
03. அத்தியாயம் - நிதிச் செயலாற்றுகை	24
3.1 நிதிச் செயலாற்றுகை அறிக்கை	24
3.2 நிதி நிலமைக் கூற்று	25
3.3 நிதிப் பாய்ச்சல் கூற்று	26
3.4 நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள்	27
3.5 வருமான சேகரிப்பு செயலாற்றுகை	27
3.6 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை	27
3.7 நிபி.குறிப்பு 208 பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள்/திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களம் மாவட்டச் செயலகம் மகாகாண சபைக்கான செலவினத்திற்கான ஒதுக்கீடு	27
3.8 நிதியல்லா சொத்துக்கள் அறிக்கையிடல் செயலாற்றுகை	28
3.9 கணக்காய்வாளர் அறிக்கை	28-37
04 அத்தியாயம் - செயலாற்றுகை சுட்டிகள்	39
4.1 நிறுவனத்தின் செயலாற்றுகை சுட்டிகள் (செயற்பாட்டு திட்டத்தின் அடிப்படையில்)	39
4.1.1 ஏற்றுமதி விவசாய பயிர் அபிவிருத்தி வேலைத்திட்டம்	39-48
4.1.2 கட்டட நிர்மானம், திருத்த வேலை, காணி அபிவிருத்தி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள்	49
05. அத்தியாயம் - பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG)அடையும் செயலாற்றுகை	50
5.1 திணைக்களத்திற்கு அடையாளம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகள்	50-52
5.2 பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடைவுகள் மற்றும் சவால்கள்	52-55

06 அத்தியாயம் - மனிதவள விபரம் 57
6.1 பதவியணி முகாமைத்துவம் 57
6.2 நிறுவனத்தின் செயலாற்றுகை மனித வள பற்றாக்குறை பாதிக்கும் முறை 57
6.3 மனிதவள அபிவிருத்தி 57-58

07 அத்தியாயம் - இணக்கப்பாட்டு அறிக்கை 59-63
ஏற்றுமதி விவசாய பயிர்களின் ஏற்றுமதி இறக்குமதி அளவு 64

அத்தியாயம் 01

நிறுவன விபரம்/செயற்பாட்டுச் சுருக்கம்

1.1. அறிமுகம்.

பண்டைய காலம் தொட்டே இலங்கை கறுவாச் செய்கையில் புகழ் பெற்றிருந்தது. இறுப்பினும் 1971இல் தேசிய விவசாயக் கொள்கையின் கீழ் இத்தொழில்துறைக்கு கவனம் செலுத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து, 1972 ஆம் ஆண்டில், அமைச்சரவை விஞ்ஞாபனம் ஒன்றின் மூலம் தோட்டத் தொழில்துறை அமைச்சுடன் இணைந்ததாக சிறு ஏற்றுமதி பயிர்கள் திணைக்களம் ஸ்தாபிக்கப்பட்டது. 1975 ஆம் ஆண்டில் இந்தத் திணைக்களம் விவசாய அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது. உலக உணவுத் திட்டம் (WFP) மற்றும் ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டுத் திட்டம் (UNDP) ஆகியவற்றால் ஆரம்பிக்கப்பட்ட பயிர் பல்வகைப்படுத்தல் மேம்பாட்டுத் திட்டத்தின் ஒரு பகுதியை திணைக்களத்திற்குகையளிப்பதோடு அப்போது திணைக்களத்திற்கு சொந்தமாக இருந்த எல்லை நிலங்களில் வாசனைத் திரவியங்கள் பயிரிடுவதற்குப் பதிலாக ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் செயற்பாடுகள் வாசனைத் திரவியங்கள் சார்ந்த பயிர் வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட ஏற்றுமதிபயிர் வளர்ச்சியில் ஒரு முன்னோடியாக இருந்தது.

1992 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் கீழ் திணைக்களம் ஆனது ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் என மறுபெயரிடப்பட்டது. அதனூடாக வாசனைத் திரவியங்கள் மற்றும் ஏனைய விவசாய பயிர்களை ஏற்றுமதி செய்வது தொடர்பான சட்ட அதிகாரத்தை அது வழங்கியது. அப்போதிருந்து, திணைக்களம் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதற்கமைய வாசனைத்திரவிய துறையில் பிரபல்யம் அடைந்து அதன் வளர்ச்சி மற்றும் விரிவாக்கம் தொடர்பில் நாடலாவிய ரீதியில் வளையமைப்பு ஒன்றினை உருவாக்குவதன் மூலம் திணைக்களம் இத்துறையில் சம்பந்தப்பட்ட பங்குதாரர்களுக்கு வசதிகளை செய்து கொடுக்கின்றது.

ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் பிரதானமாக கறுவா, மிளகு, கிராம்பு, சாதிக்காய், ஏலக்காய், கோப்பி, கொக்கோ, வெற்றிலை, பாக்கு, வெண்ணிலா,பெங்கிரி, சேர,குரக்காய்,கித்துல், இஞ்சி மற்றும் மஞ்சள்போன்ற பயிர்களை வாசனைத் திரவிய பயிர்களாக ஏற்றுமதி செய்வதை இலக்காகக் கொண்டுள்ளது. பயிர் அபிவிருத்தியின் போது கோப்பி, கொக்கோ மற்றும் வெணிலா ஆகியவை பானப் பயிர்களாகவும், பாக்கு ஒரு தூண்டுதல் பயிராகவும் கவனத்தை ஈர்த்துள்ளன. அதிக அறுவடையை தரக்கூடிய தொழில்நுட்ப அறிவு, புதுமைகள் மற்றும் பயிர்வகைகளை அறிமுகப்படுத்துவதும், ஏற்றுமதி விவசாய பயிர்களின் அபிவிருத்திக்காக ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி சேவைகளை தொடர்ந்து வழங்குவது திணைக்களத்தின் பிரதான பொறுப்பாகும்.

அதற்கமைய 2021 ஆம் ஆண்டு திணைக்களத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு இருந்த ரூபா 700.00 மில்லியன் ஒதுக்கீட்டின் ஊடாக திணைக்களத்தின் மொத்த மூலதன முதலீட்டு வேலைத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன.

ஒட்டுமொத்த பொருளாதார மற்றும் சமூகத் துறைகள் உட்பட நாட்டின் அனைத்து துறைகளிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய கோவிட்-19 உலகளாவிய தொற்றுநோயின் தாக்கம் ஏற்றுமதி விவசாயத் துறையைபெரிதும் மோசமாக பாதித்திருந்த போதிலும்திணைக்களத்தின் சிறப்பு தலையீடு மற்றும் அர்ப்பணிப்புடன்அந்த சவால்களை வெற்றி கொள்வதற்கு 2021 ஆம் ஆண்டில் திணைக்களத்திற்கு இயலுமாக இருந்தது.

உயர்தரத்தினாலான மஞ்சளை உள்நாட்டில் பயிரிடப்படக் கூடியதாக இருப்பினும் மஞ்சள் இறக்குமதி செய்யப்பட்டது. பொருளாதார பாதிப்புக்களை 2019 ஆம் ஆண்டில் அடையாளம் காணக்கூடியதாக இருந்ததுடன் இறக்குமதியை கட்டுப்படத்துவதற்கும் உள்நாட்டில் உற்பத்தி செய்து தன்னிரைவு மட்டத்தை அடைந்துக் கொள்வதை நோக்காகக் கொண்டு மஞ்சள் மற்றும் இஞ்சியை உள்நாட்டில் பயிரிடுவதை ஊக்குவிக்கும் பொருட்டு 2021 ஆம் ஆண்டு விஷேட கவனத்தை திணைக்களம் செலுத்தியது. முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது, மஞ்சள் நடுகை பரப்பளவின் அளவு 2021 ஆம் ஆண்டில் அதிகரித்து காணப்பட்டது மற்றும் மஞ்சள் உற்பத்தி 2021 ஆம் ஆண்டில் கணிசமான அளவில் அதிகரித்து தன்னிரைவு மட்டத்தை அன்மித்தது.

உற்பத்தி அளவை அதிகரிப்பதன் மூலம் ஏற்றுமதி வருவாயை அதிகரிக்கும் திணைக்களத்தின் பிரதான நோக்கத்தை அடைவதன் பொருட்டு நடவடிக்கை மேற்கொள்ளும் போது நடுகை மேற்கொள்ளும் பரப்பளவை அதிகரிக்கும் பொருட்டு செலுத்தப்பட்ட அவதானம் மற்றும் ஒப்பீட்டளவில் ஏற்றுமதி பயிர்களின் பெறுமதி கூட்டப்பட்ட உற்பத்திகளை அதிகரிப்பதன் ஊடாக அதிக சந்தை நன்மைகளைப் பெறுவது தொடர்பிலும் 2021 ஆம் ஆண்டில் விஷேட கவனம் செலுத்தப்பட்டது.

கட்டுப்படுத்த முடியாத வெளிப்புற தாக்கங்களான கோவிட் -19 உலகளாவிய தொற்றுநோயின் மோசமான விளைவுகள் இருந்தபோதிலும்,காலநிலை மாற்றம் மற்றும் சந்தை விலைகளின் தாக்கம் ஆகியவற்றின் காரணமாகவும் 2020 இல் ஏற்றுமதி வருவாய் ரூபா 72,991.98 மில்லியனிலிருந்து 2021 ஆம் ஆண்டு அதனை ரூபா 102,939.40 மில்லியனாக அதிகரித்துக் கொள்ள முடியுமாக இருந்தது. சர்ச்சைக்குரியதாக மாறியுள்ள மஞ்சள் உற்பத்தியின் சாதக நிலையை அடைந்து கொள்வதற்கு இயலுமாக இருந்தமை ஒரு நேர்மறையான அம்சமாகும்

1.2. நிறுவனத்தின்இலக்கு,செயற்பணி,நோக்கம்

இலக்கு

பலசரக்கு மற்றும் அது தொடர்பான உற்பத்தியில் சிறந்து விளங்குகின்றது.

செயற்பணி

அதிகளவில் அந்நியச் செலாவனியை பெற்றுக் கொள்வதன் பொருட்டு ஏற்றுமதி விவசாய பயிர் துறையில் ஈடுபட்டுள்ள சகல பங்குதாரர்களும் நிலையான பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியில் முன்னோக்கிச் சென்று, சூழலை பாதுகாத்துக் கொள்ளும் வகையில் ஏற்றுமதி விவசாய உற்பத்திகளின் அளவிலும் மற்றும் தரத்திலும் அபிவிருத்தியை மேற்கொள்வதன் நிமித்தம் தேவையான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளை திட்டமிடுதல் மற்றும் செயற்படுத்துதல்.


நோக்கம்

ஏற்றுமதி அளவினை அதிகரித்தல் மற்றும் உற்பத்தியின் தரத்தினை உயர்த்துவதன் ஊடாக உச்ச அளவிலான அந்நியச் செலாவனியை உழைப்பதன் பொருட்டு ஏற்றுமதி விவசாய பயிர் அலகினை அபிவிருத்தி செய்தல்.

1.3. பிரதான செயற்பாடுகள்

- ஏற்றுமதி விவசாயப் பயிர்களின் ஒழுங்கமைப்பு, விவசாய மேம்பாடு, மற்றும் செயன்முறை.
- பயிர் மேம்பாடு, பயிர் வளர்ப்பு, பயிர் பாதுகாப்பு, அறுவடைக்குப் பின்னரான அனுகுமுறை மற்றும் சமூக பொருளாதாரம் என்பவற்றின் மீது பல்வேறு ஆய்வுகளை மேற்கொள்ளல்.
- தரமான நடுகைப் பொருட்களை உற்பத்தி செய்தல் மற்றும் வினியோகித்தல்.
- பயிர் உற்பத்தி, உற்பத்தித் திறன் மேம்பாடு, மற்றும் தர மேம்பாடு என்பவற்றின் மீது ஏற்றுமதி விவசாய பயிர் உதவி திட்டத்தை அமுலாக்கல்.
- பயிர் பாதுகாப்பு ஆலோசனை சேவை வழங்குதல்.
- ஒருங்கினைந்த பீடை முகாமை மேம்படுத்துதல்.
- ஒருங்கினைந்த தாவர போசனை முகாமை.
- சேதன பண்ணைகளை மேம்படுத்துதல்.
- சந்தைப்படுத்தல்,தரநிர்ணயம் மற்றும் விலை போன்றவற்றில் தரவுகள் வெளிப்படுத்துதல்.
- ஏற்றுமதி விவசாய பயிர் உற்பத்தி நடுகைப் பொருட்கள் போன்றவற்றினை இறக்குமதி செய்வதில் நின்றும் கட்டுப்பாடு விதித்தல்.
- ஏற்றுமதி விவசாயப் பயிர்களில் உற்பத்தி செயன்முறை மற்றும் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளோர். மற்றும் ஏனைய உற்பத்தியாளர்களுக்கும் பயிற்சிகளை வழங்குதல்.
- தோட்டத்துரையினள் ஏற்றுமதி விவசாய பயிர்களில் மேம்பாட்டிற்காக ஆலோசனை சேவைகளை வழங்குதல்.
- ஏற்றுமதி விவசாயப் பயிர் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் மத்தியில் உறுதியான இணைப்பை ஏற்படுத்துதல்.
- 1992 இன் 46 ஆம் இலக்க ஏற்றுமதி விவசாய சட்டத்தின் கீழ் நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டிருத்தல்.
- ஏற்றுமதி விவசாய பயிர் தொடர்பான கொள்கை விடயங்களில் ஏனைய அரச நிறுவனங்களுக்கு ஆலோசணைகள் வழங்குதல்.
- தொழில்நுட்ப மாதிரித் தோட்டங்களை பராமரித்தல்

1.4 நிறுவன ஒழுங்கமைப்பு – ஏற்றுமதி விவசாயத் திணைக்களம்



பி.ப.நி-பிரதிப் பணிப்பாளர் நிதி,பி.ப.தொ-பிரதிப் பணிப்பாளர்,பி.ப.ஆ-பிரதிப் பணிப்பாளர் ஆய்வு,பி.ப.நி-பிரதிப் பணிப்பாளர் நிதி,உ.ப-உதவிப் பணிப்பாளர்,அபி-அபிவிருத்தி,திட்-திட்டமிடல்,க.அ-கண்காணிப்பு அலகு,ஊ.பி-ஊடகப் பிரிவு,ப.பா-பயிர் பாதுகாப்பு,ம.ஆ.நி-மத்திய ஆய்வு நிலையம்,ஆ.உ.அ-ஆய்வு உப அலகு,பொ.ஆ.அ-பொருளாதார ஆய்வு அலகு, பள்ளி-புள்ளிவிபரவியலாளர்,வி.ஆ.உ.தி.உ.-விவசாய ஆராய்ச்சி உற்பத்தித்திறன் உத்தியோகத்தர்,நி.உ.ம.வ-நிர்வாக உத்தியோகத்தர் மனித வள,நி.உ.பௌ.வ.-நிர்வாக உத்தியோகத்தர் பௌதீக வள,ஆ.அ.உ.-ஆய்வு அபிவிருத்தி உதவியாளர்,அ.உ.-அபிவிருத்தி உதவியாளர்,வ.செ.தி.உ.-வரவு செலவு திட்ட உதவியாளர்,தொ.உ.- தொழில்நுட்ப உத்தியோகத்தர்,மு.உ.-முகாமை உதவியாளர்,உ.க.ஆ.-உள்ளக கணக்காய்வு உதவியாளர்,நூ-நூலகர்,வி.உ.-விரிவாக்கல் உத்தியோகத்தர்,ஆ.உ.-ஆய்வு உதவியாளர்,த.நி.ப- தரவு நிரற் படுத்துனர். ப.சே.உ.- பண்ணை சேவை உதவியாளர்

1.5.திணைக்களத்தின் பிரதான அலகுகள் மற்றும் நிறுவனங்கள்

1.5.1. திணைக்களத்தின் பிரதான அலகுகள்

1. அபிவிருத்தி அலகு
2. ஆராய்ச்சி அலகு
3. நிர்வாக அலகு
4. கணக்கீட்டு அலகு

1.5.2. மாவட்டப் பணிமனைகள் 17 பின்வருமாறு விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

மத்திய மாகாணம்	-	கண்டி, மாத்தளை, நுவரெலியா
சப்ரகமுவ மாகாணம்	-	கேகாலை, இரத்தினபுரி
ஊவா மாகாணம்	-	பதுளை, மொனராகலை
தென்மாகாணம்	-	காலி, மாத்தறை, ஹம்பந்தோட்டை
மேல்மாகாணம்	-	கொழும்பு, களுத்துரை, கம்பஹ
வடமேல் மாகாணம்	-	குருனாகலை, (புத்தளம் மாவட்டம் உள்ளடங்கலாக)
கிழக்கு மாகாணம்.	-	அம்பாறை (மட்டக்களப்பு மாவட்டம் உள்ளடங்கலாக)
வடமத்திய மாகாணம்	-	அனுராதபுரம், பொலன்னறுவை

ஆய்வு நிலையங்களினதும் மற்றும் உப அலகுகளினதும் அமைவிடம் வருமாறு

1. மத்திய ஆராய்ச்சி நிலையம் - மாத்தளை
2. கறுவா ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையம்,பலோல்பிடிய, திஹகொடை, மாத்தரை
3. இடைப்பயிர் மற்றும் வெற்றிலை ஆராய்ச்சி நிலையம், தம்பலஸ்ஸ, நாரம்வலை
4. பொருளாதார சந்தை ஆய்வு அலகு, தலைமை பணிமனை, பேராதனை
5. மலையக ஆராய்ச்சி நிலையம், தெல்பிடிய, கம்பளை.
6. தசை வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம் மற்றும் நாற்று மேடை, வல்பிட, கம்பஹா
7. உப ஆராய்ச்சி நிலையம்,குண்டசாலை
8. உப ஆராய்ச்சி நிலையம்,நில்லம்பே கலஹா

திணைக்களத்தின் மத்திய செடி வளர்ப்பு நிலையங்களின் அமைவிடம்.

குருனாகலை மாவட்டம்	-	செராபீஸ் செடி வளர்ப்பு நிலையம், பொல்கஹவெலை,
	-	ஹொலொன்கொல்ல செடி வளர்ப்பு, தொடன்கஸ்லன்த,
	-	வென்னொருவ செடிவளர்ப்பு நிலையம், நாரம்வலை
நுவரெலியா மாவட்டம்	-	பிளக்வோட்டர், செடி வளர்ப்பு நிலையம் கினிஹத்ஹேன,
	-	முல்ஹல்கெலே, செடி வளாப்பு நிலையம் வலபனை
மாத்தளை மாவட்டம்	-	மத்திய செடி வளர்ப்பு நிலையம் - எல்வெல, உக்குவலை
மாத்தறை மாவட்டம்	-	மத்திய செடி வளர்ப்பு நிலையம் - மாபலான, கம்புருபிடிய
கேகாலை மாவட்டம்	-	மத்திய செடி வளர்ப்பு நிலையம் - கஸ்நேவ, நெலுந்தெனிய
கம்பஹ மாவட்டம்	-	மத்திய செடி வளர்ப்பு நிலையம் - வல்பிடிய
ஹம்பந்தோட்டை மாவட்டம்	-	ம.செ.வ.நிலையம் மற்றும் வாசனைத்திரவிய பூங்கா – மித்தெனிய

அத்தியாயம் 02

செயலாற்றுகை மற்றும் அடுத்த இலக்கு

2.1 சிறப்பு சாதனைகள் மற்றும் கையகப்படுத்துதல்

2021 ஆம் ஆண்டு நிலவிய கோவிட் தொற்று நோய் நிலவிய காலப்பகுதியிலும் கூட ஏற்றுமதி விவசாய பயிர் துறையை மேம்படுத்துதல் மற்றும் அது சார்ந்த உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதன் ஊடாக அதிக அந்நியச் செலாவனியை உழைப்பதை நோக்காகக் கொண்டு 2021 ஆம் ஆண்டு ஏற்றுமதி விவசாய பயிர் அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் பொது திறைசேரியின் ஊடாக பெற்றுத்தரப்பட்ட ரூபா 700.00 மில்லியன் ஒதுக்கீட்டில் இருந்து ரூபா 360,697,382.13 உம் மற்றும் அமைச்சின் ஊடாக பெற்றுத்தரப்பட்ட ஒதுக்கீட்டில் இருந்து ரூபா71,578,022.00 நிதி தொகை ஏற்றுமதி விவசாய வலய வேலைத்திட்டத்தின் கீழ் மஞ்சள் மற்றும் இஞ்சி செய்கை வேலைத் திட்டத்தின் பொருட்டு ரூபா 68,190,554.83 உம் மற்றும் சிறு நீர்ப்பாசன அலகின் பொருட்டு ரூபா 10,773,487.48 பெறுமதி கொண்ட அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் 2021 ஆம் ஆண்டு திணைக்களத்தின் ஊடாக செயற்படுத்தப்பட்டது. இதற்கும் மேலாகஅமைச்சின் ஒதுக்கீட்டின் கீழ் 432-2-3-7-2507 செலவுவிடயத்தின் ஊடாகரூபா 30.00 மில்லியன் தொகைஒதுக்கீடுநீர் வழங்கள் வளையமைப்புமுறைஒன்றினைஸ்தாபிக்கும் பொருட்டுதிணைக்களத்திற்குபெற்றுக் கொடுக்கப்பட்டது. அந்தஒதுக்கீட்டின் கீழ் கஸ்நேவ மத்தியநாற்றுமேடை,மாத்தலைமத்தியநாற்றுமேடைஎன்பவற்றிற்குநீர் மூலங்களை ஸ்தாபிக்கும் பொருட்டும்மற்றும்கருத்திட்டத்தைபூரணப்படுத்தும்பொருட்டும்தேவையானவைகொள்வனவுசெய்யப் பட்டன. மாத்தலைமத்தியநாற்றுமேடைகினறுஒன்றும் நிர்மானிக்கப்பட்டது.

இந்த வேலைத்திட்டங்களின் பெறுபேறுகள் தொடர்பில் கவனத்திற் கொள்கையில்

- ஏற்றுமதி விவசாய பயிரான கறுவா, மிளகு, சாதிக்காய், கிராம்பு, கொக்கோ, ஏலம், வெனிலா மற்றும் கோப்பி என்பன புதிய நடுகை பரப்பளவு 1635.15 ஹெக்டேயராக காணப்பட்டதுடன் திணைக்களத்தின் ஊடாக 2021 ஆம் ஆண்டின் பொருட்டு திட்டமிடப்பட்டு இருந்த நிலப்பிரமானத்தில் 96.7% நடுகை மேற்கொள்ளப்பட்ட அளவு கையகப்படுத்திக் கொள்ள முடியுமாக இருந்தது. முன்னய வருடத்தை போலவே விவசாயிகள் மத்தியில் ஏற்றுமதி விவசாய பயிர்செய்கை மேற்கொள்வதன் பொருட்டு அதிக கேள்வி நிலவியதன் காரணமாக ஏற்றுமதி விவசாய திணைக்களத்தின் ஊடாக அதன் பொருட்டு பல்வேறு வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. இங்கு விவசாயிகளுக்கு திணைக்களத்தின் ஊடாக சான்றுபடுத்தப்பட்ட ஏற்றுமதி விவசாய பயிர் நடுகைப் பொருள் இலவசமாக விவசாயிகளுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டது. இதன் கீழ் விவசாயிகளின் பொருட்டு பெற்றுக் கொடுக்கப்பட்ட ஏற்றுமதி விவசாய பயிர் கன்றுகளின் எண்ணிக்கை 9,383,310 ஆகும்.

- ஏற்றுமதி விவசாய பயிர்களை மேம்பாடு செய்யும் நோக்கில் வீட்டுத் தோட்டச் செய்கை வேலைத்திட்டம் 2021 ஆம் ஆண்டு செயற்படுத்தப்பட்டது. அத்துடன் சிற்றளவிலான வீட்டுத் தோட்டச் செய்கை வேலைத்திட்டம் மற்றும் சுபீட்சமான வீட்டுத் தோட்டங்களின் ஊடாக ¼ ஏக்கருக்கும் குறைந்த சிற்றளவிலான நிலத்தின் பொருட்டு கன்றுகள் 3,108,129 இனை விவசாயிகளுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டது. இதன் ஊடாக சிற்றளவிலான நில உரிமையாளர்களின் பொருட்டு தமது வீட்டுத் தோட்டங்களின் ஏற்றுமதி விவசாய பயிர் செய்கை ஊக்கமளிப்பதன் ஊடாக வீடுகளில் வாசனைத் திரவிய தேவைப்பாடுகளையும் அடைந்து கொள்வதை நோக்காகக் கொண்டுள்ளது.

அதற்கு அமைய, வீட்டுத் தோட்ட வேலைத்திட்டத்தின் கீழ் ஒவ்வொறு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும்,கமநல சேவை கேந்திரம் மற்றும் கிராம உத்தியோகத்தர் மட்டத்தில் அல்லது தேசிய மட்டத்தில் செயற்படுத்தப்படுகின்ற வீட்டுத் தோட்ட அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் பொருட்டு கன்றுகள் இலவசமாக வழங்கப்பட்டது. அந்த வேலைத்திட்டத்தின் கீழ் 120,541 கன்றுகள் பகிர்ந்தளிக்கப்பட்டது.

- அதிகௌரவ ஜனாதிபதி அவர்களது எண்ணக்கருக்கு அமைய அரசாங்கத்தினால் மஞ்சள் பயிரை இறக்குமதி செய்வதற்கு ஆரம்பத்தில் மட்டுப்படுத்தப்பட்டதோடு மஞ்சள் செய்கையின் பால் உள்நாட்டில் அதிக அளவிலான செய்கையாளர்கள் முன் வந்ததுடன் அதற்கு அமைய மஞ்சள் செய்கையின் பொருட்டு காணப்பட்ட கேள்வியும் உயர்ந்தது. அதன் காரணமாக 2021 ஆம் ஆண்டு ஏற்றுமதி விவசாய பயிர் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் மஞ்சள் மற்றும் இஞ்சி செய்கையை மேம்படுத்தும் வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டது. அதற்கு அமைய ஏற்றுமதி விவசாய திணைக்களத்தினால் 2021 ஆம் ஆண்டை இலக்காகக் கொண்டு மஞ்சள் செய்கை மேற்கொள்ளப்படகின்ற நிலப் பரப்பளவு அதிகரிக்கப்பட்டது. இங்கு தொடரான செய்கை நிலப்பரப்பு ஆகக் கூடியது 01 ஹெக்டேயர் வரையிலும் ஆகக் குறைந்தது 10 கிலோ கிராம் முதல் ஆகக் கூடியது 300 கிலோ கிராம் வரை நிரம்பல் செய்ய முடிவதுடன் தரமான மஞ்சள் விதை கிழங்கு 01 கிலோ கிராம் ரூபா 150 என்ற அடிப்படையில் மஞ்சள் செய்கையாளர்களுக்கு முதலீட்டு கொடை நிதி பெற்றுக் கொடுக்கப்பட்டது. அதற்கு அமைய ஏற்றுமதி விவசாய திணைக்களத்திற்கு உரிய சகல மாவட்டங்களிலும் 661.10 ஹெக்டேயரில் மஞ்சள் செய்கை மேற்கொள்ளப்பட்டது.

- அதற்கும் மேலாக வீட்டுத் தோட்டங்கள் பொருட்டு மஞ்சள் கன்றுகளை பெற்றுக் கொடுக்கும் வேலைத்திட்டம் செயற்பட்டடுத்தப்பட்டதோடு, அதன் கீழ் இல்லப்பயன்பாட்டின் பொருட்டு தேவையான மஞ்சள் இஞ்சி தேவைப்பாட்டை தமது வீட்டுத் தோட்டத்தில் உற்பத்தி செய்வதை நோக்காகக் கொண்டிருந்தது. இங்கு நகர மற்றும் அரை நகர இல்லங்களுக்கு முன்னுரிமை பெற்றுக் கொடுக்கப்பட்டதுடன் ஒரு இல்லத்தின் பொருட்டு தேவைக்கு ஏற்ப ஆகக் கூடியது மஞ்சள் கன்றுகள் 05 உம் இஞ்சி கன்றுகள் 05 உம் இலவசமாக வழங்கப்பட்டது. இங்கு மஞ்சள் கன்றுகள் 5,222,527 மொத்தமாக நாடு பூராகவும் பகிர்ந்தளிக்கப்பட்டது.

- அவ்வாறே, ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் ஒதுக்கீட்டின் கீழ் மஞ்சள் மற்றும் இஞ்சி விதை ஸ்தாபிக்கும் வேலைத்திட்டம் ஒன்று செயற்படுத்தப்பட்டது. அதன் கீழ் தமது நிறுவன வளாகத்தினுள் மஞ்சள் அல்லது இஞ்சி விதை தோட்டம் ஸ்தாபித்துக் கொள்வதற்கு தேவைப்பாடுள்ள மற்றம் விருப்பம் கொண்டுள்ள அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு உரிய காணிகளிலும் விதைத் தோட்டம் ஸ்தாபிக்கப்பட்டது. அங்கு நடுகை நிலப்பரப்பு ஆகக் கூடியது 1 ஹெக்டேயர் வரையிலும் தேவையான தரமான மஞ்சள் விதை அளவு உரிய நிறுவனங்களுக்கு இலவசமாக வழங்கப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் அவற்றிற்கான தொழில்நுட்ப ஆலோசணைகள் மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள் திணைக்கள உத்தியோகத்தர்களினால் பெற்றுக் கொடுக்கப்பட்டன. மஞ்சள் மற்றும் இஞ்சி விதை ஸ்தாபிக்கும் வேலைத்திட்டத்தின் ஊடாக மஞ்சள் மற்றும் இஞ்சி செய்கையாளர்களுகு தேவையான தரமான மஞ்சள் இஞ்சி விதை தட்டுப்பாடின்றி வழங்குவதற்கு

எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் மஞ்சள் செய்கை அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில் விஸ்தரிப்பு செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றன.

- கூட்டு கிராம வேலைத்திட்டத்தின் கீழ் ஒரு கிராமம் அல்லது பல கிராமங்கள் கூட்டுக் கிராமமாக ஒருங்கிணைக்கப்பட்டு இந்த வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டது. இங்கு ஏற்றுமதி விவசாய பயிர் கன்றுகள் வினியோகிப்பது முதல் அறுவடை செய்து சந்தைப்படுத்தும் வரை முறையான திட்டமிடல் தயாரிக்கப்பட்டு விவசாயிகளை உயிர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்த வேலைத்திட்டத்தின் கிழ் 98 கிராமங்கள் பொருட்டு ஏலம், வெனிலா, சாதிக்காய் போன்ற பயிர்களின் 104,622 கன்றுகள் 98 கிராமங்கள் பொருட்டு பகிர்ந்தளிக்கப்பட்டன.

- சூழல் பாதுகாப்பினை நோக்காகக் கொண்டு 2021 ஆம் ஆண்டு பாக்கச் செய்கை வேலைத்திட்டம் மாவட்ட மட்டத்தில் செயற்படுத்தப்பட்டது. இந்த வேலைத்திட்டத்தின் கீழ் பாக்கு கன்றுகள் 1,099,420 அளவு வீட்டுத் தோட்ட, அரச, தனியார் நிறுவனங்கள் மற்றும் தோட்டச் சங்கங்களுக்கு பகிரந்தளிக்கப்பட்டது.

- ஏற்றுமதி விவசாய பயிர் உற்பத்தி போதியதாகவும் மற்றும் தரத்தை மேம்படுத்தும் நோக்கிலும் பிரதானமாக மூன்று அலகுகளின் கீழ் திறன் மேம்படுத்தும் வேலைத்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்டது. சிறந்த விவசாய விஞ்ஞான முறையை பின்பற்றி நடைமுறையில் உள்ள பயிர்ச் செய்கையின் உற்பத்தித் திறனை மேம்படுத்தும் பொருட்டு தனிமைக் கன்றுகள் இலவசமாக பெற்றுக் கொடுக்கப்பட்டது. ஏற்றுமதி விவசாய பயிர் காலநிலை மாற்றங்களுக்கு ஏற்ப மாற்றம் பெறும் பொருட்டு பொருத்தமான நீர்ப்பாசன வழங்கள் திட்டம் அறிமுகம் செய்து வைப்பதன் ஊடாக தற்போது காணப்படுகின்ற ஏற்றுமதி விவசாய பயிர்ச் செய்கைகளுக்கு நீர் தட்டுப்பாடு ஏற்படும் நிலமையில் இருந்து பாதுகாக்கும் பொருட்டு தேவையான சிறுநீர்ப்பாசன வழங்கள் அலகுகள் ஸ்தாபிக்கும் பொருட்டு தேவையான முதலீட்டு கொடைகளை வழங்குதல் மற்றும் ஏற்றுமதி பயிர்களுக்கு பாதிப்பு செலுத்துகின்ற பீடைகள் மற்றும் விலங்குகளின் பாதிப்புக்களில் இருந்து தவிர்ந்து கொள்ளும் நோக்கிலும் காற்றாடி மற்றும் வளையமைப்பு அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. அதற்கு அமைய துளி மற்றும் விசிறல் நீர்ப்பாசன முறைகள் 56 உம், பாதுகாப்பு வேளிகள் மற்றும் பயிர்ச் செய்கை பாதுகாப்பு வளையமைப்புக்கள் 80 இனையும் ஸ்தாபிக்கும் பொருட்டு செலவு செய்யப்படுகின்ற செலவு தொகையில் 50% முதலீட்டுக் கொடை முறையின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

  ஏற்றுமதி விவசாய பயிர்களின் அறுவடைக்கு பின்னரான தொழில்நுட்ப செயற்பாட்டை முறையாக மேற்கொள்வதன் ஊடாக உற்பத்தித் தரத்தை உயர்த்துதல், பெறுமதி கூட்டப்பட்ட உற்பத்திகளின் பொருட்டு ஊக்குவித்தல் மற்றும் அரச முதலீட்டு கொடைகளை பெற்றுக் கொடுக்கின்ற செயற்பாட்டை முறையாக மேற்கொள்வதை இலக்காகக் கொண்டு உச்ச அளவில் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி ஏற்றுமதி விவசாய பயிர் ஏற்றுமதி விவசாய பயிர்களின் தரத்தை மேம்படுத்தும் வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டது. இந்த முதலீட்டு கொடை முறை வெறும் அறுவடை தயாரிப்புக்களின் நவீன தொழில்நுட்ப முறைகள் / இயந்திர உபகரணங்கள் /கட்டடங்கள் /வசதிகள் என்பவற்றை அறிமுகம் செய்து வைத்தல் மற்றும் வழங்கள் செயற்பாடுகளில்

மாத்திரமன்றி ஏற்றுமதி பயிர்ச் செய்கைகளின் விவசாய விஞ்ஞானவியல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தரத்திற்கு அமைய சிறந்த உற்பத்தி செயன்முறையை (GMP) பின்பற்றி ஏற்றுமதி விவசாய பயிர் உற்பத்தியின் தரத்தை மேம்படுத்துதல், பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளுக்கு ஊக்கமளித்தல் (Value Addition), வேலைவாய்ப்புகளை அதிகளவில் உருவாக்குதல் போன்றவற்றை இலக்காகக் கொண்டு மொத்த செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன.

- 2021 ஆம் ஆண்டு திணைக்களத்தின் ஊடாக அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்ப முதலீட்டு கொடை முறையை கீழ் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கறுவா செயன்முறை நிலையங்கள் 58 உம், ஏனைய செயன்முறை நிலையங்கள் 04 மற்றம் கேந்திர செயன்முறை நிலையங்கள் 09 இன் பொருட்டும மதலீட்டு கொடைகள் பெற்றக் கொடுக்கப்பட்டது. அறுவடைக்கு பின்னரான தொழில்நுட்ப இயந்திர உபகரணங்களின் ஊடாக அறுவடையை உயர் தரத்தை பெற்றுக் கொள்ளல் மற்றம் மனித சக்தியை குறைவாக பயன்படுத்துவதன் ஊடாக உற்பத்திச் செலவினை குறைக்கும் பொருட்டு மற்றும் இயந்திர உபகரணங்கள் 396 மற்றும் கறுவா எண்ணை பிரித்தெடுப்பு அலகுகள் 18 இன் பொருட்டும் கொடைகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

- சேதன உற்பத்தியின் பொருட்டு உலக சந்தையை (Niche Market) இலக்காகக் கொண்டு சேதன விவசாய பயிர் வேலைத்திட்டம் ஏற்றுமதி விவசாய திணைக்களத்தின் ஊடாக 2021 ஆம் ஆண்டு முன்னெடுத்துச் செல்லப்பட்டது. புதிய சேதன பயிர்ச் செய்கையானது 47.5 ஹெக்டேயர் நிலப்பரப்பில் ஆரம்பிக்கப்பட்டதோடு கடந்த ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்ட சேதனப் பயிர்ச் செய்கை 85 ஹெக்டேயர்கள் மற்றும் 2021 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட சேதனப்பயிர்ச் செய்கைகள் 59.8 ஹெக்டேயர்கள் பொருட்டு தேவையான நிதிப்பங்களிப்புக்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டன. தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள சேதனக் கிராமங்கள் அமையப் பெற்றுள்ள யடவத்தை, புஸ்செல்ல, மற்றும் திவுலபிடிய சேதன விவசாய ஒழுங்கமைப்புக்கள் 03 இன் பொருட்டு சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளத்தக்க சேதனச் சான்றிதழை பெற்றுக் கொள்வதற்காக ஏற்றுமதி விவசாய திணைக்களம் உரிய தொழில்நுட்ப முறை மற்றும் நிதி பங்களிப்பு என்பவற்றினை பெற்றுக் கொடுக்கின்றது.

- ஏற்றுமதி விவசாய பயிர்பொருட்டு சிறந்த விவசாய செயன்முறை (GAP) வேலைத்திட்டத்தின் கீழ் மிளகு, கறுவா, கோப்பி மற்றும் கொக்கோச் செய்கை பொருட்டு GAP சான்றிதழ் பெற்றுக் கொடுப்பதற்காக அங்கு முதற் படிமுறையாக வேலை நடவடிக்கைகள் பொருட்டு உரிய அளவுருக்களை தயாரித்தல் மற்றும் செயன்முறை கோவை (Code of Parctice) தயாரிப்பது முடிவுறுத்தப்பட்டடுள்ளது. கிடைக்கப் பெற்றுள்ள விண்ணப்பங்கள் 429 இன் பொருட்டும் GAP கணக்காய்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

- ஏற்றுமதி விவசாய உற்பத்திகளின் தரச் சான்றிதழ் மேற்கொள்வதன் பொருட்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள சான்றுபடுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டங்களின் கீழ் ஏற்றுமதி பயிர் உற்பத்தி நிறுவனங்கள் இரண்டின் பொருட்டு உபபொருள் பகுப்பாய்வு மற்றும் அவதானக் கட்டுப்பாட்டு நிலையம் (HACCP) தொடர்பான சான்றிதழ் மற்றும் உணவு பாதுகாப்பு தொடர்பான முகாமைத்துவ வளையமைப்பு(ISO 2200) சான்றிதழைப்

போலவே உலக தரத்தொடர்பில் பிரித்தானிய சில்லரை வர்த்தக சங்கத்தினால் பெற்றுக் கொடுக்கப்படுகின்ற சான்றிதழ் (BRCGS) 2021 ஆம் ஆண்டு பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. இதன் பொருட்டு தேவையான தொழில்நுட்பம் மற்றும் நிதிப் பங்களிப்பு ஏற்றுமதி விவசாய திணைக்களத்தின் ஊடாக வழங்கப்பட்டது.

- ஏற்றுமதி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள் 11 மற்றும் சேதனச் சான்றிதழ் பெற்றுக் கொண்டுள்ள விவசாய ஒழுங்கமைப்புக்களின் உற்பத்தி சந்தைப்படுத்தலின் பொருட்டு தேவையான ஒருங்கிணைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் புதிதாக வாசனைத் திரவிய உற்பத்தி துறையில் நுழைவதற்கு எதிர்பார்க்கின்ற நபருகளுக்காக தனிநபர் ஆலோசணை சேவைகள் வழங்குதல் 134 இடம் பெற்றுள்ளன.

- ஏற்றுமதி விவசாய பயிர்களை உயர் தரத்தினாலான அறுவடையை பெற்றுக் கொள்வதன் பொருட்டு தரமான நடுகைப் பொருள் பயன்படுத்துவது மிக முக்கியமாக காணப்படுவதுடன் 2021 ஆம் ஆண்டினுள் விவசாயிகளுக்கு உயர் தரமான நடுகை பொருள் பெற்றுக் கொடுக்கப்படும் நோக்கில் திணைக்களத்தின் நாற்று மேடைகள் 12 மற்றும் தனியார் துறை நாற்று மேடைகள் 739 இன் ஊடாக தேவையான நடுகைப் பொருட்கள் பண்ணையாளர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டன. 2021 ஆம் ஆண்டு திணைக்களத்தின் கஸ்நாவ நாற்று மேடையின் பொருட்டு தாய் தாவர தோட்டம் ஸ்தாபிக்கப்படுதல், அமைச்சின் ஒதுக்கீட்டின் கீழ் கஸ்நாவ மற்றும் மாத்தளை சிறு நீர்ப்பாசன திட்ட வளையமைப்புக்கள் ஸ்தாபிக்கப்பட்டதுடன் ஏனைய நடுத்தர நாற்று மேடைகள் பொருட்டு தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் வழங்கப்பட்டன. அதற்கு அமைய 2021 ஆம் ஆண்டு திணைக்கள மற்றும் மத்திய நாற்று மேடைகளில் இருந்து கன்றுகள் 2.7 மில்லியன் உற்பத்தி செய்யப்பட்டது. கன்று சான்றுபடுத்தும் செயற்பாட்டின் கீழ் கன்றுகள் 2.05 மில்லியன் திணைக்களத்தின் ஊடாக செயற்படுத்தப்படுகின்ற வேலைத்திட்டத்தின் ஊடாக விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன. மேலும் சந்தையில் விலை அதிகரித்தமை காரணமாக விதை விலைகளும் அதிகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் அதற்கு அமைய 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 09 ஆம் திகதி முதல் பாக்கு விதை ரூபா 4.00 ஆகவும் 2021 ஜூலை மாதம் 22 ஆம் திகதி முதல் சாதிக்காய் விதை விலை ரூபா 13.00 ஆகவும் உயர்ந்தது.

- ஏற்றுமதி விவசாய திணைக்களத்தில் உள்ள சகல உத்தியோகத்தர்களினதும் உள்ளக பயிற்சி நடவடிக்கைகள் மற்றும் சகல தரப்பினரதும் தொழில்நுட்ப அறிவினை இற்றைப்படுத்தல் தொடர்பாக பொறுப்புச் சொல்லப்படுகின்ற சேவை மீளாய்வு பயிற்சி நிலையங்கள் 2021 ஆம் ஆண்டில் நாடெங்கிலும் பரவிக் காணப்பட்ட கோவிட் - 19 தொற்று நோய் நிலமை காரணமாக வருடத்தின் ஆரம்ப காலப்பகுதியில் பயிற்சி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. அதற்கு அமைய அறுவடைக்கு பின்னரான தொழில்நுட்பத்திறனை உயர்த்துவதற்கான பயிற்சி மற்றும் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நடவடிக்கைள் அனுமதிக்கப்பட்ட சுகாதார ஒழுங்கு விதிகளுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. அவ்வப்போது நாட்டில் நிலவிய தொற்று நோய் நிலமை ஏற்பட்டதன் காரணமாக ஆட்களை ஒன்று திரட்டும் பணிகள் இடைநிறுத்தியமை காரணமாக பயிற்சி நிலையத்தின் வதிவிடம் கோவிட் தனிமைப்படுத்தும் நிலையமாக

பெற்றுக் கொடுப்பதற்கு நேரிட்டது. இதன் காரணமாக பயிற்சி யளிக்கும் பொருட்டு காணப்பட்ட இடையுறுகளை தவிர்த்துக் கொள்வதன் பொருட்டு நிகழ்நிலை முறையின் கீழ் ஏற்றுமதி விவசாய தொழில்நுட்ப நிபுனர்களின் அதிகாரபூர்வமாக திணைக்களத்திற்கு உள்ளேயும் மற்றும் திணைக்களத்திற்கு வெளியேயும் இருந்து வளவாளர்களின் சேவை பெற்றுக் கொள்ளப்பட்டு விவசாயிகள் உட்பட நாடு பூராகவும் பரம்பிஉள்ள நபர்களுக்கு நிகழ் நிலையில் Zoom தொழில் நுட்பத்தின் ஊடாக பயிற்சி பாடநெறி வாராந்தம் தொடராக நடாத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்து. இந்த வேலைத்திட்டத்தின் ஊடாக ஏற்றுமதி விவசாய பயிர் செய்கையில் காணப்படுகின்ற பிரச்சினைகள் அறுவடைக்கு பின்னரான தொழில்நுட்ப முறை மற்றும் முயற்சியான்மை சந்தர்ப்பங்கள் தொடர்பில் நிபுனத்துவ அறிவூட்டல் மேற்கொள்ளப்பட்டன. இங்கு திணைக்கள உத்தியோகத்தர்கள் 40 பேர் மற்றும் ஏனைய நிறுவன உத்தியோகத்தர்கள் 151 பேர் மற்றும் நிகழ் நிலை முறையில் பயனாளிகள் 1250 பேர் பொருட்டும் தேவையான பயிற்சிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன. மாத்தரை பலோல்பிடிய தேசிய கறுவா அராய்ச்சி நிலையம் மற்றும் பயிற்சி நிலையத்தின் ஊடாக கறுவாச் செய்கையின் சிறந்த விவசாய முறைமை சிறந்த உற்பத்தி முறைமை மற்றும் கறுவாச் செய்கையின் போது செய்கை பராமரிப்பு நடவடிக்கைகள்,நோய் மற்றும் பீடை கட்டுப்பாடு நடவடிக்கைகள் தொடர்பில் பயிற்சி வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

- வரலாற்றில் அதி உயர் ஏற்றுமதி வருமானத்தை அறிக்கை செய்ததன் காரணமாக 2021 ஆம் ஆண்டு ஏற்றுமதி விவசாய துரைக்கு மிகவும் உண்ணதமான வருடமாகும். உலக தொற்று நோய் நிலமையின் கீழும் கூட 2021 ஆம் ஆண்டினுள் ஏற்றுமதி விவசாய பயிர் 62,580.86 மெற்றிக் தொன் ஏற்றுமதி செய்துரூபா 102,939.4 மில்லியன் வருமானம் உழைக்கப்பட்டது. முன்னய வருடத்தை விடவும் 2021 ஆம் ஆண்டு ஏற்றுமதி அளவு 20.38% இனால் அதிகரித்து காணப்பட்டதுடன் ஏற்றுமதி வருமானம் 41.03% இனால் அதிகரித்துக் காணப்பட்டது. கறுவா, மிளகு, கிராம்பு, ஏலம், ஒரு வகை சுவையூட்டி, கோப்பி, வெனிலா, மற்றும் எண்ணை வகை போன்ற கறுவா இலை எண்ணைய், மிளகு எண்ணைய், ஏலம் எண்ணைய், சாதிக்காய் எண்ணைய், சுவையூட்டி எண்ணைய் போன்றவை 2020 ஆம் ஆண்டை விடவும் ஏற்றுமதியில் அதிகரித்து காணப்பட்டது.

- கறுவாவை கவனத்திற் கொள்கையில் ஏற்றுமதி அளவு 18,813,52 மெற்றிக் தொன் ஆக காணப்பட்டதுடன் அது முன்னய வருடத்தை விடவும் 0.49% அதிகரித்து காணப்பட்டது. கறுவா ஏற்றுமதி 2020 ஆம் ஆண்டு ரூபா 38,218.08 மில்லியன் வருமதியாக காணப்பட்டதுடன் அது 2021 ஆம் அண்டு ரூபா 45,879.17 மில்லியன் ஆகவும் அதிகரித்து காணப்பட்டதோடு அது 20.04% அதிகரிப்பாகும். 2020 ஆம் ஆண்டு மொத்த ஏற்றுமதி வருமானம் 48.5%கறுவா ஏற்றுமதியில் இருந்து ஈட்டப்பட்டு இருந்தது. மிளகு ஏற்றுமதி அளவு மற்றும் ஏற்றுமதி பெறுமதியில் மும்மடங்கு அதிகரிப்பு முன்னய வருடத்தை விடவும் 2021 ஆம் ஆண்டில் காணக் கூடியதாக இருந்தது. 2020 ஆம் ஆண்டை விடவும் மிளகு ஏற்றுமதி அளவு 98.74% அதிகரிப்பு மற்றும் ஏற்றுமதி பெறுமதியில் 148.31% அதிகரிப்பும் காணப்பட்டது.

2021 ஆம் ஆண்டு ஏற்றுமதி விவசாய பயிர்களின் எற்றுமதியானது 2020 ஆம் ஆண்டை விடவும் குறைந்து காணப்பட்டது. அத்துடன் இறக்குமதி அளவு 5.69% ஆகவும்

இறக்குமதி செலவு 31.8% ஆகவும் குறைந்து காணப்பட்டது. இறக்குமதி செலவுகளில் 88% கொக்கோ மற்றும் கொக்கோ உற்பத்தி இறக்குமதிகளின் பொருட்டுசெலவு செய்யப்பட்டு இருந்தது. ஏற்றுமதி விவசாய பயிர்களுக்கு இடையில் கறுவா, ஏலம், வெனிலா, மஞ்சள் மற்றும் இஞ்சி போன்ற பயிர்கள் 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இறக்குமதி குறைந்து காணப்பட்டதுடன் கறுவா இலை எண்ணைய்கறுவாப்பட்டை எண்ணைய் மிளகு, மிளகு எண்ணைய், கிராம்பு, கிராம்பு எண்ணைய், கொக்கோ,கோப்பி, பாக்கு, வெனிலாஎண்ணைய், சிட்ரனெல்லா எண்ணைய், லெமன் கிராஸ் எண்ணைய் மற்றும் இஞ்சி எண்ணைய் போன்றவற்றின் ஏற்றுமதி 2020 உடன் ஒப்பிடுகையில் அதிகரித்து காணப்பட்டது.

- மிளகின் விலை 2016 முதல் 2018 வரை மற்றும் 2020 முதல் குறைந்து காணப்பட்டதுடன் அதனால் 2021 ஆம் ஆண்டு முதல் தீடீரென அதிகரித்தது. 2021 ஆம் ஆண்டு இறுதி காலாண்டில் மிளகு சந்தையில் சாதாரண விலை 1 கிலோ கிராமுக்கு ரூபா 1000.00 இனை விடவும் அதிகரித்து காணப்பட்டது.

- 2021 ஆம் ஆண்டு அரைப் பகுதியில் கோவிட் 19 தொற்று நோய் கட்டுப்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டதுடன் ஏற்றுமதி விவசாய பயிர்கள் தொடர்பில் பண்ணை நடவடிக்கைகள் மற்றும் அது சார்ந்த செயற்பாடுகள் பொதுவான நிலைக்கு கொண்டு வரப்பட்டதுடன் இங்கு மிகவும் தெளிவாக புலப்படுவது 2021 ஆம் ஆண்டு உலக தொற்று நோய் நிலமை இலங்கை விவசாய ஏற்றுமதி துரையில் அறிக்கையிடக்கூடியவாறான ஏற்றுமதி வருமானத்தை உழைப்பதாகும்.

- மஞ்சள் ஏற்றுமதி முழுமையாக தடை செய்யப்பட்டதோடு அடுத்த வருடத்தில் உள்நாட்டு மஞ்சள் தேவைப்பாட்டை அடைந்து கொள்வதன் பொருட்டு 2021 ஆம் ஆண்டு மஞ்சள் செய்கையில் ஊக்குவிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் ஏற்றுமதி விவசாய திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டது. மஞ்சள் உற்பத்தியை அதிகரிப்பதற்கும் மற்றும் தரத்தை மேம்படுத்துவதற்கும் ஆராய்ச்சி வேலைத் திட்டங்கள் ஏற்றுமதி விவசாய திணைக்களத்தின் ஆராய்ச்சி அலகினால் பங்களிப்பு நல்கப்பட்டது.

- பல்வேறு மஞ்சள் பதனிடும்முறை தொடர்பில் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டதோடு அங்கு மஞ்சள்களின் தரத்திற்கு அங்கு உள்ள தாக்கங்கள் தொடர்பில் ஆய்வு செய்யப்பட்டது. இங்கு பயன்களின் வெளிப்படுத்தப்பட்டது. உள்நாட்டு மஞ்சள் மற்றும் இந்தியா மஞ்சளுக்கும் இடையே கர்கியுமின் விகிதம் மற்றும் பௌதிக மற்றும் இரசாயன வேறுபாடுகள் உள்ளது என்பதாகும். உயர் தரத்தினாலான மஞ்சள் பெற்றுக் கொள்வதன் பொருட்டு அவிப்பது கட்டாயமாகும். மிகவும் சிறந்த உலர வைக்கும் முறை மஞ்சள் துண்டு துண்டாக வெட்டி உலர வைப்பதாகும்.

- மஞ்சள் இன சுட்டிகள் 20 கீழ் நாட்டு இடை வலயத்தில் (Ilia) மதிப்பீடு செய்யக்கூடிய பற்றைக்கு 1011.2 கிராம் அறுவடை பெற்றுத் தந்த AmpT4 இன சுட்டி உயர் அறுவடையை பெற்றுத் தருகின்ற இனச் சுட்டியாக தெரிவு செய்யப்பட்டள்ளது.

- கிளிரிசீடியா இலை மற்றும் மாட்டுச் சானி போன்ற சேதனப் பொருட்களை பயன்படுத்துகின்ற போது மிளகுகளின் உடன் தொற்றுகின்ற நோயை கட்டுப்படுத்திக் கொள்ள முடியும் என அவதானிக்கப்படுகின்றது.

- மரபணு பிளாஸ்மா பாதுகாப்பு மிகவும் முக்கியமானது. பல்லுயிர் பாதுகாப்பு மற்றும் எதிர்கால ஆராய்ச்சிக்கு இது பயனுள்ளதாக இருக்கும். நாற்பத்தாறு வெற்றிலை உற்பத்தி செய்யும் பிளாஸ்மாக்கள் பிளாஸ்டிக் பானைகளில், அதாவது உள்ளூர் அல்லாத சேமிப்புகளில் சேமிக்கப்பட்டன.

- வணிகப் பயிரான வெற்றிலை கணிசமான அளவு அந்நியச் செலாவணியை ஈட்டித் தருகிறது. குருநாகல் மாவட்டம் வெற்றிலை உற்பத்தி செய்யும் பிரதான மாவட்டமாகும். இந்த மாவட்டத்தில் பல்வேறு வெற்றிலை விளையும் பகுதிகளில் மண் வளம் குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

- அரச கொள்கையாக பசுமை விவசாயத்தை செயற்படுத்துகின்ற போது கறுவா நாற்று மேடைகளில் நோய் மற்றும் பீடை கட்டுப்பாட்டின் பொருட்டு சேதன கரைசல்களை பயன்படுத்துவதற்கான இயலுமை தொடர்பில் ஆய்வு செய்யப்பட்டது இலை கருகல் நோயை கட்டுப்படுத்துவதற்கான சிறந்த முறையாக போலிக் அமிலத்திற்கு பதிலாக பறோடோ கலவையை கரைக்கப்பட்டுள்ள சல்பூரிக் மற்றும் கொஹம்பா இலை சாற்றினால் இலை கருகல் நோயை கட்டுப்படுத்த முடியும் என்பது தீர்வாகக் கண்டறியப்பட்டன. இலைகளின் கீழ் பகுதியில் முடிச்சுகளுக்கு ஏற்படுகின்ற முடிச்சுகளை கரைக்கின்ற சல்பூரிக் ஊடாக ஏனைய ஒழிப்பு முறைகளுக்கும் மிகவும் வெற்றிகரமானது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கம்பளிப்பூச்சுகளை கட்டுப்படுத்தும் பொருட்டு போடோ கலவையை கறுவா விதை கன்றுகள் பொருட்டு சல்பூரிக் சிகிச்சையளிப்பு வெற்றிகரமாக இருந்தது.

- இலங்கையில் கறுவா தோட்டங்கள் மற்றும் நாற்று மேடைகளில் ஒரு வகையான பூச்சி, கறுவா விதை மெக்கா சமீபத்தில் அடையாளம் கண்டு வகைப்படுத்தப்பட்டது. Helionothrips annosus Wang ஒரு அழிவுகரமான பூச்சியாக அடையாளம் காணப்பட்டது, குறிப்பாக நாற்றங்கால்களில், மற்றும் அறிவியல் அம்சங்கள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. இலங்கையில் உள்ள தைசனோப்டெரா (Thysanoptera) சரிபார்ப்புப் பட்டியலும் இற்றைப்படுத்தப்பட்டுள்ளது.

- மானாவாரி சாய்வான நிலங்களில் கறுவாப்பட்டை தண்டு துளைப்பான் அந்துப்பூச்சியை கட்டுப்படுத்த தண்டுகளின் அடிப்பகுதியில் மண் சேர்த்து வைப்பதற்கு மாற்று முறையாக களிமண் கலவை கொண்டு மூடி வைப்பது நல்லது என கண்டறியப்பட்டது.

- இலங்கையில் அறிக்கை செய்யப்படுகின்ற கறுவா இலை உண்பவர் அடையாளம் காணப்பட்டதோடு அக்ரோசர்காப்ஸ் எஸ்பிபி Acrocercops sppஎன அடையாளம் காணப்பட்டது.

- மிளகு இடைவிடாமல் பூப்பதற்கு காரணம் ஒழுங்கற்ற மழை முறை. இதனால் அறுவடை குறைகிறது.

- இலங்கையில் பயிரிடப்படுகின்ற சாதிக்காயில் உள்ள இரசாயன கலவைகள் மற்றும் ஆக்ஸிஜனேற்ற பண்புகள் ஆகியன கண்டறியப்பட்டன.

- இலங்கை சந்தையில் கிடைக்கும் மஞ்சள் தூளின் பௌதீக மற்றும் இரசாயன பண்புகள் பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இலங்கையில் விவசாய வயல்களில் இருந்து பெறப்படும் மஞ்சளில் உள்ள கர்கியுமினின் சதவீதம் 6% க்கும் அதிகமாக உள்ளது, ஆனால் உள்ளூர் சந்தையில் கிடைக்கும் மஞ்சள் தூளில் உள்ள கர்கியுமினின் சதவீதம் 3% க்கும் குறைவாக உள்ளது, இது இலங்கை தரத்துடன் பொருந்தாது.

- இஞ்சிகளில் அறுவடை செய்வது முதல் புதிதாக தோற்றம் பெறும் வரையிலான கால இடைவெளியை மாற்றுவதன் மூலம் அடுத்து நடுகின்ற பொது அரும்பு உற்பத்தியாகும் இயலுமை தொடர்பில் ஆய்வு செய்யப்பட்டது. இஞ்சிப் பருவத்திலும் சரி,பருவம் அ்லாத காலத்திலும் சரி, சேமிப்பு ஊடகம் இல்லாமல் சேமிக்கப்படும் இஞ்சியின் வேர்த்தண்டுக்கிழங்கில் உள்ள நீரின் அளவு குறைந்தது. அதிக ஈரப்பதத்தை பாதுகாக்கும் உமி, மரத்தூளை விட சிறந்த சேமிப்பு ஊடகமாக இருந்தது. அதிகபட்ச சேமிப்பக நேரத்தை வழங்கும் 50% மர தூளில் முளைப்பதற்கு குறைந்த நேரத்தை எடுத்துக்கொள்கின்றன. இஞ்சியை அறுவடை செய்த 50 வாரங்களுக்கு சேமித்து வைத்தால், இஞ்சி விதைகள் விரைவாக முளைக்கும்.

- மிளகு கொடிகளுக்கு மிகவும் பொருத்தமான ஆதரவு செடியாக தலையணை பருத்தி செடி தேர்வு செய்யப்பட்டுள்ளது. தலையணை செடிக்கு ஆதரவாக பயன்படுத்தப்படும் மிளகு கொடிகளால் துணை கொடியிலிருந்து குறைந்த ஈரப்பதம் கிடைக்கிறது.

- அதிக பொருளாதார மதிப்பு காரணமாக ஏலக்காய் செய்கைக்கான கேள்வி அதிகரித்து வருகிறது. ஏலச் செய்கைக்கு ஏற்ற நிலங்கள் குறைவாக இருப்பதால் ஏலக்காய் செய்கையின் விஸ்தரிப்பு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அதிக ஈரப்பதம், உகந்த மண்ணின் ஈரப்பதம் மற்றும் உகந்த வெப்பநிலையுடன் கூடிய சேதனப் பொருட்கள் நிறைந்த மண் ஏலக்காய் செய்கைக்கு உகந்தது. எனவே, ஏலக்காய் செய்கையை விஸ்தரிப்பதற்கு புதிய வாய்ப்புகளை ஆராய வேண்டும். இதற்காக ஒரு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு கீழ் நாட்டு நிழல் வலைகளின் கீழ் தோட்டங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. கூடுதல் நீர்ப்பாசன வசதிகளின் கீழ் 60% -70% நிழல் வலைகளின் கீழ் ஏலக்காய் பயிரிடலாம் என்பதும் கவனிக்கப்பட்டது.

- ஏலக்காய் / ஏலக்காய் விதை முளைப்பதில் நைட்ரிக் அமிலம் மற்றும் ∴பார்மிக் அமிலத்தின் விளைவு ஒப்பிடப்பட்டது. அதன் வலுவான விதைப்பு காரணமாக, முளைப்பு குறைவாக உள்ளது. ஏலக்காய் விதைகளின் சராசரி முளைப்பு விகிதம் சுமார் 30% ஆகும். சுமார் 70% முளைப்பு விகிதத்தை அடைய 25% செறிவூட்டப்பட்ட நைட்ரிக் அமிலத்தை விதைத் தடுப்பானாகப் பயன்படுத்துமாறு ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் பரிந்துரைக்கிறது. பண்ணை மட்டத்தில் அதிக அளவு நைட்ரிக் அமிலத்தைப் பயன்படுத்துவது பாதுகாப்பு மற்றும் சுகாதாரப் பிரச்சினையை ஏற்படுத்துகிறது. இதற்கு

தீர்வாக, செறிவூட்டப்பட்ட ∴பார்மிக் அமிலத்தை விதை நேர்த்தியாக பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆய்வு நடத்தப்பட்டது. இதன் விளைவாக, ஏலக்காய் விதைகளை 25% ∴பார்மிக் அமிலத்தில் 10 நிமிடங்கள் ஊறவைத்தால் விதை முளைப்பு 85% வரை அதிகரித்தது. செறிவூட்டப்பட்ட ∴பார்மிக் அமிலம் சந்தையில் பரவலாகக் கிடைக்கிறது அத்துடன் அது இறப்பர் பால் உறைய வைப்பதற்காக பயன்படுகிறது.

- நாற்று மேடை கலவைகளுக்கு கனிம உரங்களைப் பயன்படுத்துவதில் மிளகு நாற்றுகளின் வளர்ச்சி மற்றும் வீரியம் குறித்து ஆய்வு நடத்தப்பட்டது. நாற்று மேடைகளில் உள்ள மிளகு நாற்றுகளின் உகந்த வளர்ச்சிக்கு பரிந்துரைக்கப்படும் கலவை மேல் மண்,சாணி, தென்னை நார், மணல், 1: 1: 1: 1 ஆகும். இருப்பினும்,சாணி கிடைப்பதில் சிரமம் இருப்பதால், மேல் மண், தென்னை நார் மற்றும் மணல் ஆகியவற்றை 2: 1: 1 என்ற விகிதத்தில் இடலாம் மற்றும் ஊட்டச்சத்துக்கான ஆதாரமாக 1 கிராம் கனிப்பொருள் உரம் சேர்க்க வேண்டும். 8 * 5 அளவுள்ள கொள்கலனில்1 கிராம் பொஸ்பேட் உரம் 8 டைஅமோனியம் பாஸ்பேட் (N:P: K: 18: 46: 0) இடுவது பொருத்தமான ஊட்டச்சத்து ஆதாரமாக அடையாளம் காணப்பட்டுள்ளது. அதற்கும் மேலாக்,8 * 5 அளவு கொண்ட கொள்கலனுக்கான கூட்டு உரத்தை நைட்ரஜன்: பொஸ்பரஸ்: பொட்டாசியம் 12:11:18 என்ற வீதத்தில் சேர்ப்பது அல்லது 8 * 5 அளவு கொள்கலனுக்கு கூட்டு உரம் 1 கிராம் என்ற விகிதத்தில் அதாவது நைட்ரஜன்: பாஸ்பரஸ்: பொட்டாசியம் 15:15:15 என்ற விகிதத்தில் இட வேண்டும். பொட்டாசியம் வழங்கப்படுவது சல்பேட் ஒப் பொட்டாசியத்தில் இருந்தாகும) பெற்றுக் கொடுக்க முடியும். இருப்பினும்,8 * 5 அளவுள்ள பாத்திரம் ஒன்றிற்கு கூட்டு உரம் 2 கிராமுக்கு மேல் உரம் இடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும், ஏனெனில் இது தாவரத்தை மோசமாக பாதிக்கலாம்.

- இஞ்சி நோய் மற்றும் பீடை கட்டுப்பாட்டுக்காக ஒருங்கிணைந்த பீடை கட்டுப்பாடு தொகுப்பை உருவாக்கியது.

2.2 சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள்

2.2.1. சவால்கள்

- 2021 ஆம் ஆண்டில் கொரோனா தொற்று நிலைமை இருந்தபோதிலும், திணைக்களம் தொடர்ந்து அபிவிருத்தி திட்டங்களைச் செயல்படுத்தி வந்தது. அவ்வப்போது நடைமுறைப்படுத்தப்பட்ட ஊரடங்கு உத்தரவு இருந்த போதிலும், இணையதளங்கள்,Face book, Zoom இணைய வசதிகள் மற்றும் தொலைக்காட்சி மற்றும் வானொலி நிகழ்ச்சிகள் மற்றும் தொலைபேசி போன்ற வழிமுறைகளின் ஊடாக திணைக்கள உத்தியோகத்தர்களால் ஏற்றுமதி பயிர்கள் குறித்து தொழில்நுட்ப ஆலோசனைகளும் வழிகாட்டுதல்களும் வழங்கப்பட்டது.

- விவசாய நிலத்திற்கு தேவையான தொழில்நுட்பத்தை மிகவும் திறமையானதாக மாற்றுவதில் மிகவும் பயனுள்ளதாக விவசாய விரிவாக்க சேவையானது பங்காற்றினாலும், திணைக்களத்திற்கு தேவையான கள உத்தியோகத்தர்களது

எண்ணிக்கைக்கும் தற்போது பணியமர்த்தப்பட்டுள்ள கள அலுவலர்களின் எண்ணிக்கைக்கும் இடையே இன்னும் பெரிய இடைவெளி உள்ளது. இந்த விரிவாக்க உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பது அவசியம் ஆகும்.

- கொரோனா நிலைமை காரணமாக திணைக்களத்தால் தேவையான பௌதீக வசதிகளை உகந்த மட்டத்தில் வழங்க முடியவில்லை மற்றும் அதிகாரிகளுக்கான அலுவலக வசதிகள், உபகரணங்கள் மற்றும் பொருட்கள் தேவைகள் மற்றும் போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்கு போதுமான ஏற்பாடுகள் திணைக்களத்தில் இல்லை என்பது சவாலாக இருந்தது.

- 2021 இல் கோவிட் 19 தொற்றுநோயின் இரண்டாவது மற்றும் மூன்றாவது அலைகளின் தாக்கம் உலகெங்கிலும் உள்ள மக்களின் வாழ்க்கையை பாதித்தது. இலங்கையிலும், கோவிட் 19 காரணமாக நாடு அவ்வப்போது மூடப்படுவது மற்றும் மாகாணங்களுக்கு இடையிலான பயணங்களுக்கான கட்டுப்பாடுகள் ஏற்றுமதி விவசாயத் துறையையும் பாதித்தன. ஏற்றுமதியாளர்களுக்கு ஏற்றுமதி கொள்முதல் செய்வதற்கான வசதிகள் இருந்தபோதிலும் உற்பத்தியாளர்கள் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. இது முக்கியமாக போக்குவரத்து சிரமங்கள் மற்றும் நாடு மூடப்பட்டிருந்த காலங்களில் வணிக வளாகங்கள் மூடப்படடு இருந்தமையினாலாகும்.

- சில வெற்றிலைகள் போன்ற உள்ளூர் சந்தைகள் வாரக்கணக்கில் மூடப்பட்டன. ஏற்றுமதி விவசாய திணைக்களத்தின் பொருளாதார ஆராய்ச்சி அலகின் பிரதான செய்ற்பாடுகளாவன எற்றுமதி விவசாய பயிர்களின் சந்தை விலைகளை வாராந்தம் ஒன்று திரட்டுவதாகும். கோவிட் 19 தொற்றுநோய் காரணமாக நாடு மூடப்பட்டுவிட்டதாலும், மாகாணங்களுக்கு இடையேயான பயணத்திற்கான கட்டுப்பாடுகளாலும், கள அதிகாரிகளால் கொள்முதல் மையங்களில் இருந்து சந்தை விவரங்களை சேகரிக்க முடியவில்லை. நாட்டில் உள்ள மூடல்கள் மற்றும் மாகாணங்களுக்கு இடையேயான வழிசெலுத்தலுக்கான கட்டுப்பாடுகள் பொருளாதார ஆராய்ச்சி மற்றும் கள ஆய்வுகள் துறையில் உள்ள ஆராய்ச்சி அதிகாரிகளுக்கு அந்தப் பணியை மேற்கொள்வதை கடினமாக்கியது.

- மிளகு விரைவாக வாடிவிடும் நோய் மற்றும் தண்டு துளைப்பான் சேதம் குறிப்பாக மொனராகலை மற்றும் பதுளை மாவட்டங்களில் அதிகமாக பரவி உள்ளது. இதனைக் கட்டுப்படுத்த ஏற்றுமதி விவசாய திணைக்களத்தின் பூச்சியியல் வல்லுநர்கள், நோயியல் வல்லுநர்கள் மற்றும் கள உத்தியோகத்தர்கள் இணைந்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

- அரசின் பசுமை விவசாய கொள்கையை செயல்படுத்த திணைக்களத்தின் இரசாயன உரப் பரிந்துரைகள் சேதன உர பயன்பாட்டை மீள் மதிப்பீட்டுக்கு உட்படுத்தியது.

- கோவிட் 19 தொற்றுநோய் காரணமாக, ஆராய்ச்சித் துறைகளில் அறுவடை, தரவு சேகரிப்பு போன்றவற்றை சரியான நேரத்தில் மேற்கொள்வது கடினமாக இருந்தது. உதவி ஊழியர்களின் பற்றாக்குறை ஆராய்ச்சி நடவடிக்கைகளை மோசமாக பாதித்தது.

2.2.2. எதிர்கால இலக்குகள் / நோக்கங்கள்

- ஏற்றுமதி வருவாயை அதிகரித்தல்
  2021ஆம்ஆண்டில்ஏற்றுமதிபயிர்களில் இருந்து கிடைத்த ஏற்றுமதி வருவாய் ரூபா 102,939.40 மில்லியன் ஆகும்.அத்துடன் அது முன்னைய ஆண்டை விட அதிகமாக காணப்பட்டு இருந்ததுடன், 2025 ஆம் ஆண்டில் ஏற்றுமதி வருவாய் ரூபா 100 பில்லியனை அடைவதனை நோக்காகக் கொண்டு தற்போதுசெய்கைமேற்கொள்ளப்படும் நிலப் பரப்பை அதிகரிப்பது அலகு ஒன்றில் இருந்து பெறப்படும் அறுவடையை அதிகரிப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது.

- சேதனப் பயிர்ச்செய்கையை பிரபல்யப்படுத்தல்
  அரசினால் இரசாயன உரப் பயன்பாட்டைக் குறைத்தல் மற்றும் சேதன உர உற்பத்தியை ஊக்குவிக்கும் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் காரணமாக சந்தையில் இரசாயன உரங்கள் தட்டுப்பாடு ஏற்பட்டதால்,சேதன விவசாயத்தில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டினர். மேலும்,சேதன உற்பத்திகளின் பொருட்டு பொருட்களுக்கு சந்தையில் நிலவும் அதிக விலை காரணமாக,சேதன பயிர் உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் பொருளாதார நன்மைகளை அடைந்து கொள்ளும் நோக்கில்,சேதன ஏற்றுமதி விவசாயப் பயிர்களின் பரப்பளவை அதிகரிப்பதில் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அங்கு திணைக்களத்தினால் இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்கவும் தேவையான விரிவாக்கத் திட்டங்களுக்கு நிதியைப் பெறுவது அவசியம்.

- சிறந்த உற்பத்தி நடைமுறைகள் (GMP)சான்றுபடுத்தல் செயல்முறை, சிறந்த விவசாய நடைமுறைகள் (GAP)வேலைத்திட்டம் மற்றும் ஏற்றுமதி பயிர் பதப்படுத்தும் மையங்களை செயல்படுத்துதல்.
  பொருளாதார ரீதியாக அதிக அன்னியச் செலாவணியை ஈட்டுவதற்கு,ஏற்றுமதி விவசாய பயிர் உற்பத்தி, பெறுமதி கூட்டப்பட்ட பொருட்களாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் அதிக வருமானம் பெறுவதற்கான சாத்தியக்கூறுகளை கருத்தில் கொள்வது அவசியம். சிறந்த உற்பத்தி நடைமுறைகள் மற்றும் சிறந்த விவசாய நடைமுறைகள்களத்தில் உள்ள விவசாயிகள் மற்றும் உற்பத்தியாளர்கள் மத்தியில் பிரபலப்படுத்த வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் கீழ், ஆர்வமுள்ள உற்பத்தியாளர்களை ஈர்க்கவும், நவீன இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை அறிமுகப்படுத்தவும் ஒழுங்குபடுத்தவும் திணைக்களம் தலையிடும். இதன் கீழ், அதிக ஏற்றுமதி விவசாய பயிர் உற்பத்திகளை வெளிநாட்டு சந்தைகளுக்கு அறிமுகப்படுத்துவதன் மூலம் அதிக வெளிநாட்டு வருமானத்தை ஈட்ட எதிர்பார்க்கப்படுகிறது.

- காலநிலைமாற்றத் தாக்கம் மற்றும்வனவிலங்குசேதத்தைத்தடுக்கும் பொருட்டு தேவையான கருவிகள் மற்றும் உபகரணங்களைப் பயன்படுத்துதல்
  தற்போதையகாலநிலை நிலைமைகளால் ஏற்படுகின்ற வெள்ளம் மற்றும் வறட்சி போன்ற காலநிலை தாக்கங்களினால் ஏற்படுகின்ற பாதகமான விளைவுகளிலிருந்து ஏற்றுமதி விவசாய பயிர்களைப் பாதுகாப்பதற்காக சிறு நீர்ப்பாசனத்தைப் பயன்படுத்துவதை பிரபல்யப்படுத்தவும், அங்கு பயிர்களுக்கு ஏற்படும் சேதத்தைக் குறைத்து அதிக அறுவடையை அடைந்து கொள்வதற்கான தொடர்புடைய

இலக்குகளை அடையவும் எதிர்பார்க்கப்படுகின்றன. அங்கு தேவைக்கேற்ப சிற்றளவிலான நீர்ப்பாசன முறைகளை வழங்குவதற்கும், விவசாயிகள் தங்கள் பயிர்களை வனவிலங்கு பாதிப்புகளிலிருந்து பாதுகாக்கவும் தேவையான உபகரணங்களை வழங்குவதற்கும் தேவையான ஒதுக்கீடுகளை திணைக்களத்திற்கு பெற்றுக் கொடுக்க வேண்டியது கட்டாயமாகும்.

- ஏற்றுமதி பயிர்களுக்கான சேதன மாதிரிகளை மேம்படுத்துதல் அரசின் கொள்கையான பசுமைக் கொள்கையின் காரணமாக திணைக்களம் ஏற்றுமதி விவசாயப் பயிர்களுக்கு சேதன உரங்களை மதிப்பீடு செய்ய வேண்டும்.
- ஏற்றுமதி விவசாய பயிர்களின் நோய் மற்றும் பீடை கட்டுப்பாட்டின் பொருட்டு இரசாயன பொருளன்றி கட்டுப்பாட்டு முறையை அறிமுகம் செய்து வைக்க வேண்டும்.
- எனவே வழக்கமான பாத்திர ஊடகங்களின் பற்றாக்குறை காரணமாக, ஏற்றுமதி விவசாய பயிர்களின் விவசாயிகளுக்கு எளிதாக பரிந்துரைக்கப்படும் நாற்று மேடை கலவைகளை அறிமுகப்படுத்த வேண்டும்.
- மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அளவு மற்றும் தரமான அதிகரிப்புக்கு ஏற்றுமதி பயிர்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட மரபணு மாதிரிகள் பரிந்துரைக்கப்பட்ட உயிரியல் முறை உபாயங்களின் கீழ் பல்வேறு இட மதிப்பீட்டுக்கு உட்படுத்தி பின்னர் சிறந்த பயிர்ச் செய்கை மாதிரிகளை விவசாயிகளுக்கு பெற்றுக் கொடுக்க முடியும்.
- மிளகு சாகுபடியில் விரைவான வாடல் நோய் மற்றும் தண்டு துளைப்பான் சேதத்தை கட்டுப்படுத்த பல ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.
- உயர் தரத்தினாலான நடுகை பொருட்களை பெற்றுக் கொடுக்கும் பொருட்டு தாய் தாவர தோட்டங்களை ஏற்படுத்துதல்.
- ஒவ்வொரு மாவட்டத்திலும் பயிர் முன்னறிவிப்புத் தரவு சேகரிப்பை ஒழுங்குபடுத்துவதற்கு மிகவும் நம்பகமான தரவு மற்றும் நில மட்ட தரவுகளைப் பெறுதல்.
- ஏற்றுமதி விவசாய பயிர்களுக்கு பயிர் முன்னறிவிப்பு மாதிரியின் பொருட்டு கள மட்டத்தில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.
- ஏற்றுமதி விவசாய பயிர் கொள்வனவு செய்யப்படுகின்ற நிலையங்களில் வாராந்த பண்ணை விலை சேகரிப்பின் போது அவற்றினை சரியாக பெற்றுக் கொள்ளல்.
- ஏற்றுமதி விவசாய துறையில் அதிகம் கவனம் செலுத்தக்கூடிய துறைகள் தொடர்பில் ஆராய்ச்சி மேற்கொள்ளப்படும்

.....

ஏ.பீ.பீ.திஸ்ணா
பணிப்பாளர் நாயகம்
ஏற்றுமதி விவசாய திணைக்களம்

A.P.P. DISNA
Director General
Department of Export Agriculture
1095, Sirimavo Bandaranayake Mawatha
Peradeniya

அத்தியாயம் 03

நிதி நிலைமைக் கூற்று அறிக்கை

3.1. நிதி செயல்திறன் கூற்று

2021.12.31 ஆம் திகதி அன்று முடிவடைந்த ஆண்டிற்றகான நிதி செயல்திறன் கூற்று.

ACA-F

வரவு செலவு திட்டம் 2021	விடயம்	குறிப்பு	உண்மையான 2021	2020	
	வருமான பெறுகைகள்				
-	வருமான வரி	1	-	-	
-	பொருட்கள் சேவைகள் மீதான வரி	2	-	-	
-	வெளிநாட்டு வர்த்தகம் மீதான வரி	3	-	-	ACA 1
-	வரியல்லா வருமானங்கள் மற்றும் ஏனைய	4	-	-	
-	மொத்த வருமான பெறுகைகள் A		-	-	
	வருமானமல்லா பெறுகைகள்		-	-	
1,536,516,000	திறைசேரி கட்டுநிதி		1,179,550,000		ACA 3
4,000,000	வைப்புக்கள்		4,864,487		ACA 4
47,000,000	முற்பனக் கணக்குகள்		43,042,029		ACA 5/5(a)
	ஏனைய பெறுகைகள்				
1,587,516,000	மொத்த வருமானமல்லா பெறுகைகள் (B)		1,227,456,516		
1,587,516,000	மொத்த வருமான பெறுகைகள் + மொத்த வருமானமல்லா பெறுகைகள் (C) = (A) +(B)		1,227,456,516		
68,309	திரைசேறி பெறுகை		1,927		
1,587,447,691	தேறிய வருமானம் பெறுகைகள் C) = (A) +(B)		1,227,454,589		
	கழி : செலவினங்கள்				
	மீண்டுவரும் செலவுகள்				
660,500,000	கூலி, சம்பளங்கள் மற்றும் ஏனைய ஊழியர் நலன்கள்	5	629,847,910	623,951,152	ACA 2(ii)
71,900,000	ஏனைய பொருட்கள் சேவைகள்	6	71,209,393	67,901,012	
12,600,000	மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள்	7	9,901,734	10,752,315	
-	வட்டி செலுத்துதல்	8			
745,000,000	ஏனைய மீண்டுவரும் செலவுகள்	9	-		
	மொத்த மீண்டுவரும் செலவுகள் (D)		710,959,037	702,604,479	
	மூலதனச் செலவு				
14,000,000	மூலதன சொத்துக்களின் புனர்நிர்மானம் மற்றும் மேம்பாடு	10	12,590,281	8,910,086	
11,900,000	மூலதனச் சொத்துக்களின் சுவீகரிப்பு	11	11,625,392	9,126,563	
700,000,000	மூலதன மாற்றல்கள்	12	360,697,382	528,269,650	
	நிதிச் சொத்துக்களின் சவீகரிப்பு	13			ACA 2(ii)
2,100,000	இயலுமை கட்டமைப்பு	14	409,325	438,265	
12,150,000	ஏனைய மூலதனச் செலவுகள்	15	13,108,232	6,661,093	
740,150,000	மெத்த மூலதனச் செலவுகள் (E)		398,430,612	553,605,656	
	பிரதான பேரேட்டுச் செலவுகள் (F)				
	கொடுப்பனவுகள் வைப்பிலிடல் 14				ACA 4
			3,303,161	1,989,038	
	முற்பன கொடுப்பனவு 15 வேறு				ACA 5/5(a)
35,000,000	பிரதான பேரேட்டுக் கணக்க		51,433,938	25,329,758.24	
35,500,000	பிரதான பேரேட்டுச் செலவு 14+15		54,737,100	27,318,796	
1,520,150,000	மொத்த செலவு G= (D+E+F)		1,164,126,748	1,283,528,932	
	2021 டிசம்பர் 31 ஆம் திகதி அன்று முடிவடைந்த கட்டுநிதி மீதி H=(C-G)		63,327,841	3,906,901	
	கட்டுநிதிக்கு அமைய இருப்பு		63,327,841	3,906,901	ACA 7
	டிசம்பர் 31 கட்டுநிதி மீதி		63,327,841	3,906,901	**ACA 3**

3.2. நிதி நிலமைக்கூற்று

ACA-P

2021 டிசம்பர் 31 ஆம் திகதி அன்றுள்ளவாறான நிதி நிலமைக்கூற்று

விடயம்	குறிப்பு	உண்மையான 2021	2020
நிதியல்லா சொத்துக்கள்			
சொத்துக்கள், பொறி மற்றும் உபகரணங்கள்	ACA-6	1,110,288,684	2,588,862,844
நிதிச் சொத்துக்கள்			
முற்பனக்கணக்குகள்	ACA-5/5(a)	127,481,925	119,090,016
காசு மற்றும் காசு சமன்கள்	ACA-3		
மொத்த சொத்துக்கள்		**1,237,770,609**	**2,707,952,861**
தேறிய சொத்துக்கள் / பங்குகள்			
தேறிய சொத்துக்கள்		125,276,403	118,445,820
சொத்துக்கள், பொறி மற்றும் உபகரணங்கள்		1,110,288,684	2,588,862,844
வாடகை மற்றும் வேலை முற்பணம்	ACA-5(b)		
நடைமுறை பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்குகள்	ACA-4	2,205,522	644,196
கட்டுநிதி மீதி	ACA-3		
மொத்த பொறுப்புக்கள்		**1,237,770,609**	**2,707,952,861**

மேலேயுள்ள ஏ.சி.ஏ படிவத்தில் விரிவான கணக்கியல் அறிக்கைகள் எண் 1 முதல் 6 வரை பக்க இல 04 முதல் 33 வரையிலான பக்கங்களில் வழங்கப்படுகின்றன மற்றும் பக்கங்களில் வழங்கப்பட்ட கணக்குகளுக்கான குறிப்புகள் பக்க இலக்கம் 34முதல் 41 வரையாகும். அத்துடன் இந்த நிதிநிலை அறிக்கைகளின் ஒருங்கிணைந்த பகுதிகள்முன்வைக்கப்படுகின்றன. நிதி அறிக்கைகள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கோட்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன, அதேசமயம் மிகவும் பொருத்தமான கணக்கியல் கொள்கைகள் நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளபடி பயன்படுத்தப்படுகின்றன, மேலும் இந்த நிதிநிலை அறிக்கைகள், கணக்குகளுக்கான குறிப்புகள் மற்றும் ஏனைய தொடர்புடைய கணக்குகளில் உள்ள புள்ளிவிவரங்கள் திறைசேரி கணக்கு புத்தகங்களுடனும் சமரசம் செய்யப்பட்டன என்பதை இதன்மூலம் சான்றுபகர்கின்றேன்.

.....	.....	.....
பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்	கணக்கீட்டு உத்தியோகத்தர்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்/பிரதான கணக்காளர்/பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர் (நிதி)
பெயர்: 2022/05/09	பெயர்: A.P.P. DISNA	பெயர்: R.D. ABEYWICKRAMA
பதவி:	பதவி: Director General	பதவி: CHIEF ACCOUNTANT
திகதி:	திகதி: 09/05/2022	திகதி: 09/05/2022
	Department of Export Agriculture 1095, Kandy Road, Mawatha, Peradeniya	Dept. of Export Agriculture 1095, Kandy Road Peradeniya

Saman Darshana Pandikorala
Secretary
State Ministry of Development of Minor Crops Including Sugarcane, Maize, Cashew, Pepper, Cinnamon, Cloves, Betel Related Industries and Export Promotion
16th Floor, "Suhurupaya", Battaramulla.

3.3 நிதிப்பாய்ச்சல் கூற்று

2021 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதிப்பாய்ச்சல் கூற்று

விடயம்	உண்மையான	
	2021	2020
இயக்கச் செயற்பாடுகளில் இருந்தான நிதிப்பாய்ச்சல்		
மொத்த வரி பெறுகைகள்	-	-
கட்டணங்கள், அபராதம் அபராதங்கள் மற்றும் உரிமங்கள்	-	-
இலாபம்	-	-
வருமானமல்லா பெறுவனவுகள்	1,887,618	6,999;546
பிற வருமான தலைப்பு கூட்டப்பட்ட வருமானம்	42,968,775	36,989,161
கட்டு நிதி பெறுகை	1,179,550,000	1,264,154,000
முற்பணம் அறவிடல்	1,103,318	1,853,615
வைப்புக்கள் பெறுதல்	3,719,304	668,611
இயக்கத்தில் இருந்து உருவாக்கப்பட்ட மொத்த காசு (a)	1,229,229,014	1,310,664,933
கழி : பகிருவதற்கான காசு		
ஆளுக்குரிய வேதனாளிகள் மற்றும் இயக்க கொடுப்பனவுகள்	540,722,052	551,976,837
மானியங்கள் மற்றும் பரிமாற்ற கொடுப்பனவுகள்	6,896,502	1,162,071
பிற செலவு தலைப்பு மேற்கொண்ட செலவு	623,471,903	727,456,706
நிதி செலவுகள் - திறைசேரிக்கு கட்டுநிதி செலுத்தல்	1,927	68,309
முற்பனக் கொடுப்பனவுகள்	46,705,708	18,966,777
வைப்பக்கள்	3,305,186	1,907,670
இயக்கப்பாடுகளுக்காக வழங்கப்பட்ட மொத்த பணம் (b)	1,221,103,278	1,301,538,371
இயக்க செயற்பாடுகளில் இருந்து தேறிய நிதிப்பாய்ச்சல் C=(a)-(b)	8,125,737	9,126,563
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து நிதிப்பாய்ச்சல்		
வட்டி	-	-
பங்கிலாபம்	-	-
பங்கிலாப செயன்முறை மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை	-	-
கடனிலிருந்து மீட்டெடுப்புகள்	-	-
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்த பணம் (d)	-	-
கழி : காசு பகிர்வு		
பௌதீக சொத்துக்களின் கொள்வனவு மற்றும் நிர்மானம் மற்றும் ஏனைய முதலீடுகளின் சுவீகரிப்பு	8,125,737	9,126,563
முதலீட்டு செயற்பாடுகளுக்காக பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த காசு (d)	8,125,737	9,126,563
முதலீட்டு செயற்பாடுகளில் இருந்து தேறிய நிதிப்பாய்ச்சல் F=(d)-(e)	(8,125,737)	(9,126,563)
இயக்க செயற்பாடுகள் மற்றும் முதலீட்டு செயற்பாடுகளில் இருந்து தேறிய நிதிப்பாய்ச்சல் g=(c)+(f)	(0)	0
நிதி செயற்பாடுகளில் இருந்தான நிதிப்பாய்ச்சல்		
உள்நாட்டு கடன்	-	-
வெளிநாட்டு கடன்	-	-
கொடைகள்	-	-
நிதி செயற்பாடுகளில் இருந்தான மொத்த காசு உருவாக்கம் (h)	-	-
கழி: காசு செலவினங்கள்		
அரச உத்தியோகத்தர்களின் முற்பனக்கணக்கு செலுத்துகை வைப்புக் கணக்கு செலுத்தல்		
நிதிச் செயற்பாடுகளுக்கான மொத்த காசு பகிர்வு (i)		
நிதிச் செயற்பாடுகளில் இருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (j)=(h)-(i)		
காசு தேறிய அசைவுகள் (k)=(g)-(j)	-	-
ஜனவரி 1 ஆம் திகதி அன்று ஆரம்ப மீதி	-	-
டிசம்பர் 31 ஆம் திகதி அன்று காசு மீதி	-	-

3.4 நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள்

2021 ஆம் ஆண்டிற்குறிய நிதிக்கூற்றுக்களை தயாரித்து கணக்காய்வாளருக்கு உரிய திகதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

3.5. வருமான சேகரிப்புகளின் செயலாற்றுகைரூபா ,

000

வருமான குறியீடு	வருமான குறியீட்டின் விபரம்	வருமான மதிப்பீடு		சேகரிக்கப்பட்ட வருமானம்	
		ஆரம்ப மதிப்பீடு	இறுதி மதிப்பீடு	தொகை (ரூபா)	இறுதி வருமான மதிப்பீட்டின் % ஆக
2002-01-01	அரச கட்டட வாடகை	2.6	2.6	2.71	104.2
2002-02-99	கடன் வட்டி மற்றும் ஏனைய	5	5	5.14	102.8
2003-01-00	விற்பனை மற்றும் கட்டனம்-திணைக்கள விற்பனைகள்	22	22	36.6	163.6
2003-02-99	விற்பனை மற்றும் கட்டனம்-நிர்வாக கட்டணம் மற்றும் செலுத்தல்கள் நானாவித	0	0	1.44	
2003-99-00	விற்பனை மற்றும் கட்டனம்-ஏனைய பெறுகைகள்	12	5	7.8	156
2006-02-02	மூலதன சொத்து விற்பனை	0.1	0.1	0.015	15

3.6 ஒதுக்கிட்டுபயன்பாட்டின்செயலாற்றுகைரூபா ,

000

ஒதுக்கீட்டு வகை	ஒதுக்கீடு		உண்மையான செலவினம்	பயன்படுத்தப்பட்ட ஒதுக்கீடு முடிவுறுத்தப்பட்ட இறுதி ஒதுக்கீட்டின் விகிதமாக
	ஆரம்ப மதிப்பீடு	இறுதி மதிப்பீடு		
மீண்டுவரும்	745,000,000	745,000,000	710,959,037	95.43
மூலதனம்	741,150,000	741,150,000	398,430,612	53.76

3.7 நி.பி. குறிப்பு 208 பிரகாரம் ஏணனய அமைச்சுக்கள்/திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களம்/மாவட்டச் செயலகம்/மாகாண சபைக்கான செலவினத்திற்கான ஒதுக்கீடு

தொ. இல	அமைச்சு/திணைக்களத்தில் இருந்து பெறப்பட்ட ஒதுக்கீடு	ஒதுக்கீட்டு நோக்கம்	ஒதுக்கீடு		உண்மையான செலவினம்	பயன்படுத்தப்பட்ட ஒதுக்கீடு பெற்றுத்தரப்பட்ட இறுதி ஒதுக்கீட்டின் விகிதமாக
			ஆரம்ப	இறுதி		
01.	கரும்பு, சோளம், நிலக்கடலை, மிளகு, கறுவா, கிராம்பு நெட்டி,வெற்றிலை உட்பட சிறு தோட்டப் பயிர்ச் செய்கைஅபிவிருத்தி சார்ந்த கைத்தொழில் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு	கறுவா செயன்முறை நிலையம் மற்றும் மஞ்சள் கன்று வினியோகித்தல்	179,751,394	179,751,394	715,780,22	39.8
02	கரும்பு, சோளம், நிலக்கடலை, மிளகு, கறுவா, கிராம்பு நெட்டி,வெற்றிலை உட்பட சிறு தோட்டப் பயிர்ச் செய்கைஅபிவிருத்தி சார்ந்த கைத்தொழில் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு	இஞ்சி மற்றும் மஞ்சள் கன்று வினியோகித்தல்	118,000,000	118,000,000	68,190,555	57.8
03	கரும்பு, சோளம், நிலக்கடலை, மிளகு, கறுவா, கிராம்பு நெட்டி,வெற்றிலை உட்பட சிறு தோட்டப் பயிர்ச் செய்கைஅபிவிருத்தி சார்ந்த கைத்தொழில் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு	நீர் வளங்கள் வளையமைப்பை ஸ்தாபித்தல்	30,000,008	30,000,008	10,773,487	35.9

3.8.நிதியல்லாத சொத்துக்கள் அறிக்கையிடல் செயலாற்றுகை

ஆதன குறியீடு	விபரக் குறியீடு	2021.12.31 திகதிய சுற்றாய்வு சபை அறிக்கைபடி மீதி	2021.12.31 திகதிய நிதிநிலமை அறிக்கைபடி மீதி	எதிர்காலத்தில் கணக்கிடப்பட வேண்டியது	அறிக்கையிடல் முன்னேற்ற விகிதம்
9151	கட்டிடம் மற்றும் கட்டமைப்பு	439,548,711.79	439,548,711.79		
9152	இயந்திரம் மற்றும் உபகரணம்	27,198,054.84	27,621,236.84		
9153	காணி	346,845,556.30	350,213,860.12		
9154	அருவமான சொத்துக்கள்				
9155	உயிரியல் சொத்துக்கள்				
9160	நடைபெறும் பணிகள்				
9180	குத்தகை சொத்துக்கள்				

3.9 கணக்காய்வாளர் அறிக்கை

கணக்கீட்டு உத்தியோகத்தர்
ஏற்றுமதி விவசாய திணைக்களம்

ஏற்றுமதி விவசாய திணைக்களத்தின் 2021 டிசம்பர் 31 ஆம் திகதி அன்று முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பான 2018 இன் 19 ஆம் இலக்கம் கொண்ட தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) ஆவது பிரிவிற்கு அமைய கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை

---

1. நிதிக்கூற்றுக்கள்

ஏற்றுமதி விவசாய திணைக்களத்தின் 2021 டிசம்பர் 31 ஆம் திகதி அன்று உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19

ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

1.2 அபிப்பிராயம்

,ந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த அவதானிப்புக்கள் தொடர்பில் உங்களது அபிப்பிராயங்கள் முன்வைத்ததற்கு அமைய கணக்காய்வு அறிக்கை அபிப்பிராயம் சமர்ப்பிக்கப்படும்.

1.3 நிதிக்கூறறுக்கள் தொடரப்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏறப்டக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் ஏற்றுமதி விவசாய திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் ஏற்றுமதி விவசாய திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிபப்டுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக அவ்வப்போது மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடரப்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிபப்டுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான

தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன செயற்படுத்தப்பட்டன. என்னால் மேலும்

- கணக்காய்விற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தரப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடரப்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான புரிதலை பெற்றுக்கொண்டேன்.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு கணக்கீட்டு மதிப்பீடுகள் நியாயமான மற்றும் முகாமைத்துவம் மூலம் செய்யப்பட்ட வெளிப்படுத்தல்கள் பாராட்டப்பட்டது.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமானதாகவும் உட்சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடரப்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

1.5 வேறு நாளாந்ததேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த அறிக்கையில் 1.6.1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு அமைய மீளாய்வு ஆண்டின் நிதி நிலமைக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள

சொத்துக்கள் மற்றும் உபகரணக் கணக்குகளின் மீதிகள் மற்றும் அதற்குறிய இருப்புக் கணக்குகள் மீதி முடிவடைந்த ஆண்டின் நிதிக் கூற்றுக்களுடன் இணங்காமை.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 நிதி நிலைமை தொடர்பான கூற்று

1.6.1.1 நிதியல்லா சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன

அ). முடிவடைந்த ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி அன்று தயாரிக்கப்பட்ட நிதி நிலமைக் கூற்றிற்கு அமைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் கணக்கு மீதி ரூபா 1,098,889,538 ஆக இருந்த போதும் மீளாய்வு ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி அன்று தயாரிக்கப்பட்டு இருந்த நிதி நிலமைக் கூற்றில் முன்னய வருட தகவல்களின் கீழ் அது ரூபா 2,588,862,844 ஆகவும் ரூபா 1,489,973,306 ஆதிகமாக காட்டப்பட்டு இருந்தது. அவ்வாறே அந்த பெறுமதியிலேயே ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் இருப்புப் பெறுமதி மேலதிகமாக காட்டப்பட்டு இருந்தது.

ஆ). மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு முடிவடைந்த ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி அன்று தயாரிக்கப்பட்ட நிதி நிலமைக் கூற்றிற்கு அமைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் கணக்கு மீதி ரூபா 1,098,889,538 ஆக இருந்த போதும் மீளாய்வு ஆண்டில் முன் கொண்டு செல்கின்ற போது ரூபா 1,102,130,963 ஆக குறிப்பிடப்பட்டு இருந்ததுடன் மீளாய்வு நிதி நிலமை கூற்று அறிக்கையில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 3,241,425 மேலதிகமாக குறிப்பிடப்பட்டு இருந்தது. இவ்வாறு கணக்கு வைப்பதால் கணக்கு சமநிலைப்படுத்தப்பட்ட முறை கணக்காய்விற்கு தெளிவுபடுத்தப்படவில்லை.

1.6.1.2 வைப்பக்கணக்கு மீதி

முடிவடைந்த ஆண்டில் நிதிக்கூற்றுக்களில் வைப்புக் கணக்கு தொடர்பான கூற்றிற்கு அமைய ஒப்பந்தங்கள் பொருட்டு தேக்கி வைத்த நிதி மீதி ரூபா 168,651 ஆக இருந்த போதும் அது மீளாய்வு ஆண்டில் முன் கொண்டு செல்கின்ற போது வைப்புக்கணக்கு தொடர்பில் ஆரம்ப மீதி ரூபா 179,500 என்று குறிப்பிடப்பட்டமையால் ரூபா 10,849 வேறுபாடு நிலவியது.

1.6.2. நிதிப் பாய்ச்சல் கூற்று

மீளாய்வு வருடத்திற்காக தயாரிக்கப்பட்டு இருந்த நிதிப்பாய்ச்சல் கூற்றில் கட்டு நிதி பெறுகை ரூபா 49.679,014 வைப்பு கிடைத்தமை,ரூபா 1,145,182 முற்பனப் பெறுகை ரூபா 41,938,711 ஆகவும் குறைவாக காட்டப்பட்டதுடன் வேறு செலவுத் தலைப்புக்காக மேற்கொண்ட செலவு ரூபா 468,061,621 மேலதிகமாக காட்டப்பட்டு இருந்தது.

2. நிதி மீளாய்வு

2.1 பொறுப்புக்கள் மற்றும் ஒப்பந்தங்களுக்கு உட்படல்

மீளாய்வு வருடத்திற்கான செலவு பொருட்டு 8 சந்தர்ப்பங்களில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களுக்காக செலுத்தப்பட வேண்டிய ரூபா 111,308 இற்கான பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தி இருக்கவில்லை

2.2. பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்/கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ள வேண்டிய

சான்றுபடுத்துகை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆவது பிரிவின் ஒழுங்கு விதிகளுக்கு அமைய திணைக்களத்தின் நிதி கட்டுப்பாட்டின் பொருட்டு திறனான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தயார் செய்யப்பட்டு நடாத்திச் செல்லப்படுகின்றமை தொடர்பில் கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் சான்றுபடுத்துதல் வேண்டும். அத்தகைய முறைமையின் திறன் தொடர்பில் முன்பு மேற்கொள்ளப்பட்டுள்ள மீளாய்வினை மேற்கொண்டு அதற்கு அமைய முறைமையின் திறன்மிக்கதாக கொண்டு செல்வதற்கு வேயான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டி உள்ளது என்பதையும் அந்த மீளாய்வுகள் எழுத்து மூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியை கணக்காய்வாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டி இருந்த போதிலும் அத்தகைய மீளாய்வு மேற்கொண்டதாக கூற்றினை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை.

2.3. சட்டம், சட்ட விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகளுக்கு இயைய அமையாமை

பின்வருவன சட்ட விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு அமைய இல்லாது இருந்தமை அவதானிக்கப்பட்டன.

	சட்டம், சட்ட விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகளுக்கு அமைய	பெறுமதி	இணங்காமை
		---	---
அ).	1992 இன் 46 ஆம் இலக்க ஏற்றுமதி விவசாய மேம்பாட்டுச் சட்டம்		
(i)	15(1) பிரிவு	602,900,000	எற்றுமதி மேம்பாட்டு கொடை செலுத்த வேண்டியது அறிவிப்புச் செய்யப்பட்டுள்ள விவசாய பயிர்ச் செய்கை மற்றும் தயாரிக்கப்பட்டவர்களுக்கு உதவி தொகை மற்றும் நிதி

			அல்லது வேறு கொடைகள் வழங்குவதற்கான ஆலோசணை முறையின்பொருட்டு அமைச்சரினால் கட்டளை பிறப்பிக்கப்பட்டதன் பின்னர் அத்தகைய கட்டளை தயாரிக்காது ஏற்றுமதி மேம்பாட்டு கொடை செலுத்தப்பட்டு இருந்தது.
ஆ).	இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை ----------		
	XIV ஆம் அத்தியாயத்தின் 4.4 ஆம் பிரிவு	44,100	சேவை நிலையத்திற்கு வெளியில் கடமையின் பொருட்டு செலவிடப்படுகின்ற 12 மணித்தியாலங்களுக்கும் குறையாத காலப்பகுதியின் பொருட்டு முழுமையான கூட்டிணைத்த கொடுப்பனவும், 6 மணி நேரத்திற்கு குறைவான காலப்பகுதியின் பொருட்டு கூட்டிணைத்த கொடுப்பனவின் அரைவாசியை செலுத்த முடியாது. ஆயினும் அந்த ஒழுங்குவிதிகளை கவனத்திற் கொள்ளாது கூட்டிணைத்த கொடுப்பனவு செலுத்தப்பட்டு இருந்தது.
இ)	2016 மார்ச் 17 ஆம் திகதிய இலக்கம் 01/2016(1) இனைக் கொண்ட தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை	12,996,000	கண்காணிப்பு குத்தகை முறைமையின் கீழ் வாகனங்கள் பெற்றுக் கொள்கின்ற போது பணிப்பாளர் மற்றும் அதற்கு சமனான மட்டத்தில் உள்ள உத்தியோகத்தர்களுக்கு பெற்றுக் கொள்ளப்படுகின்ற வாகனத்தின் உச்ச மாதாந்த

குத்தகை வாடகை (சேர்க்கப்பட்ட பெறுமதிக்கு அமைய குத்தகையின்றி) ரூபா 135,000 ஆகஇருக்க வேண்டியதாயினும் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகம் உட்பட பணிப்பாளர்கள் 08 பேர் பொருட்டு பெற்றுக் கொண்டு இணைப்புச் செய்யப்பட்ட வாகனங்கள் பொருட்டு மாதாந்தம் ரூபா 163,500 என்ற அடிப்படையில் செலுத்தப்பட்டு இருந்தது.

3. கண்காணிப்பு மீளாய்வு

3.1 செயலாற்றுகை

3.1.4 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய இலக்கம் 2/2020 இனைக் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கை 10.2 ஆம் பந்திக்கு அமைய அரசாங்க நிதித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டல் இலக்கம் 14 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வருடாந்த செயலாற்றுகை அறிக்கை தயாரிக்கப்பட வேண்டி இருப்பதுடன் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(2) பிரிவிற்கு அமைய அந்த வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் கணக்காய்வின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஆயினும் மீளாய்வு ஆண்டின் பொருட்டு நிதிக் கூற்றுக்களுடன் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு இருக்வில்லை.

3.2 சொத்து முகாமை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

ஆ). திணைக்களத்திற்கு உரிய அரசாங்களத்திற்குரிய வீடகள் 90 காணப்படுகின்றன. அதில் 07 வீடகள் உடைந்த நிலையில் காணப்படுகின்றன. அவ்வாறே உத்தியோகத்தர்கள் வதிகின்ற இல்லங்கள் 32 காணப்படுகின்றன. அந்த வீடுகள் மழை நாட்களில் நீர் ஊற்றெடுத்தல், மலசலகூடங்கள் உடைந்து வெடித்து காணப்படல்

மின்சாரம் இல்லாமை, குழாய் நீர் முறையில் பிரச்சினைகள் காணப்படல் போன்ற குறைபாடுகள் பல காணப்படுவதால் திருத்த வேலைகள் மேற்கொள்ள வேண்டிய நிலையில் உள்ளது.

ஆ). கன்காணிப்பு குத்தகை முறைமையின் கீழ் பெற்றுக் கொள்ளப்பட்ட வாகனங்களுக்கு உரிய ஒப்பந்தங்களுக்கு அமைய மேலதிக வாடகை செலுத்தாது மாதத்திற்கு 3000 கி.மீ. செல்ல முடியும். ஆயினும் திணைக்களத்தினால் அந்த அடிப்படையில் பெற்றுக் கொண்ட10 வாகனங்கள் தொடர்பில் கடந்த 05 வருடங்களின் வாகன ஓட்டல் தகவல்களுக்கு அமைய அந்த வாகனங்கள் மாதாந்தம் 3000 கி.மீ. ஓடி இருக்கவில்லை. அத்துடன் ஓடுவதற்கு முடியுமாக இருந்தும் அவ்வாறு ஓடாது இருந்த தூரம் 456827 கி.மி.ஆகும்.

இ). மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 15,635,000 ஆன வாகனங்கள் 15 ஒரு வருட காலப்பகுதிக்கும் மேல் பயன்படுத்தப்படாது இருந்தது.

3.3. நட்டங்கள் மற்றும் இழப்புக்கள்

கடந்த வருடங்களில் இடம்பெற்ற நட்ட நிகழ்வுகள் 4 இற்கு உரிய ரூபா 3,929,808 இற்கான நட்டம் இன்னும் அறவிடுவதற்கு அல்லது நீக்கிவிடுவதற்கு இருந்தது. அத்துடன் அதில் ரூபா 2,348,453 இற்கு உரிய நிகழ்வுகள் 2, 5 வருடத்திற்கும் மேல் காணப்படுவது அவதாணிக்கப்பட்ட

3.4 முகாமைத்துவ பலயீனங்கள்

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

அ). கஸ்நேவ நாற்று மேடை 1982 ஆம் ஆண்டு முதல் பயிர் வகை 20 இற்கு கிட்டிய வகையில் தாய் தாவரமாகவும், விதை பெற்றுக் கொள்வதன் பொருட்டும் ஆய்வு மட்டத்தில் நடாத்திச் செல்லப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்த போதிலும், கடந்த 5 ஆண்டுகளினுள் மிளகு, கோப்பி, கிராம்பு, பாக்கு மற்றும் சாதிக்காய் போன்ற பயிர்களில் இருந்து பெற்றுக் கொள்கின்ற உற்பத்தி குறைவாக காணப்படுகின்றது. மேலும் கஸ்நேவ பிரதேசத்தில் அமையப் பெற்றுள்ள ஏற்றுமதி பயிர் நாற்று மேடை 1982 ஆம் ஆண்டு முதல் நடாத்திச் செல்லப்பட்டு இருந்ததுடன் தாவர பட்டியல் 2011 ஆம் ஆண்டின் பின்னர் இற்றைப்படுத்தி இருக்கவில்லை. அவ்வாறே மரங்கள் தொடர்பான புள்ளிவிபரம் எடுக்கப்பட்டோ அல்லது மரங்களுக்கு இலக்கமிட்டு லேபல் இட்டோ இருக்கவில்லை.

ஆ). கஸநேவ காற்று மேடைக்கு 2018 டிசம்பர் மாதம் பெற்றுக் கொள்ளப்பட்டு இருந்த பாரை பொஸ்பேற்று, டொலமைட் போன்ற இரசாயன வகை 5 இற்கு உரிய கிலோகிராம் 2873 ம் 2021 டிசம்பர் ஆகின்ற போதும் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படாது இருந்ததுடன் அவை காலவதியாகி இருந்தது. அவ்வாறே இந்த தொகை கொள்வனவு செய்யப்பட்டு இருந்தபெறுமதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டு இரக்கவில்லை.

4. நிலையான அபிவிருத்தி

கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

அ). திணைக்களத்தினால் நிலையான அபிவிருத்தி தொடர்பில் ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் அண்டு 'நியாய பத்திரத்திற்கு'' அமைய தேவையான அறிவினை பெற்றுக் கொண்ட போதிலும் அந்த விடயங்கள் தொடர்பில் நிலையான அபிவிருத்தி நோக்கம், இலக்கு மற்றும் அந்த இலக்கை அடைந்து கொள்வதற்கு உள்ள அபிப்பிராய இலக்குகளுக்கு அமைய அடைந்து கொள்வதற்கு அளவிட்டுக் கொள்வதன் பொருட்டு சுட்டிகளும் அடையாளம் காண்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

ஆ). நிலையான அபிவிருத்தி நோக்கம் செயற்படுத்துவது தொடர்பில் திணைக்களத்தின் நடவடிக்கைகள் தொடர்பில் ஊக்கம் உள்ளவர்கள் இனங்காண முடிந்த போதிலும் நிறுவனத்தினால் அவர்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாததன் காரணமாக நிறுவனத்திற்கு உரிய இலக்கினை அடைந்து கொள்கையில் பங்குபற்றுகை நுழைவு வெளிப்படவில்லை.

இ). எந்த ஒரு செயற்பாட்டினையும் சரியான செயலாற்றுகையை தரவு அடிப்படையில் வைத்திருப்பது அத்தியவசியமாகும். ஆயினும் நிறுவனத்தினால் நிலையான அபிவிருத்தி இலக்குகளின் போது இலக்குகளை அடைவது தொடர்பாக அளவிடும் பொருட்டு சரியான புள்ளி விபர அடிப்படை வெளிக்காட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருக்க வில்லை.

5. மனிதவள முகாமை

ஏற்றுமதி விவசாய திணைக்களத்தின் 2021, டிசம்பர் 31 ஆம் திகதி அன்று அனுமதிக்கப்பட்டு இருந்த உண்மையான பதவியணியினரின் விபரம் தொடர்பான விபரம் கீழே தரப்பட்டுள்ளன.

சேவை வகுதி	அனுமதிக்கப்பட்ட பதவியனியினர்	தற்போதைய பதவியனியினர்	வெற்றிட எண்ணிக்கை
i. சிரேஷ்ட மட்டம்	85	62	23
ii. மூன்றாம் நிலை மட்டம்	29	9	20
iii. இரண்டாம் நிலை மட்டம்	800	645	155
iv ஆரம்ப மட்டம்	352	238	114
மொத்தம்	**1266**	**954**	**312**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

அ). சிரேஷ்ட மட்டத்தில் நிலவிய வெற்றிடங்கள் 23 இல் 16 இலங்கை விஞ்ஞான சேவைக்கு உரிய உதவிப் பணிப்பாளராக காணப்படுவதுடன் அது திணைக்கள நடவடிக்கைகளில் பெரிதும் பாதிப்பு செலுத்தியது.

ஆ). மாவட்ட /விடயவிதான கருத்திட்ட உத்தியோகத்தர் பதவி வெற்றிடங்கள் 16 நிலவியதுடன் அது கள நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்வதற்கு இடையூறாக காணப்பட்டது.

இ). ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி உதவியாளர் பதவிகள் 84 ஆனுமதிக்கப்பட்டு இருந்த போதிலும் அந்த பதவிகள் பொருட்டு எந்த ஒரு உத்தியோகத்தரும் ஆட்சேர்ப்புச் செய்யப்படட்டு இருக்கவில்லை.

ஈ). அனுமதிக்கப்பட்ட பதவியனியினருக்கு உரியதானதல்லாத காவலாளர் மற்றும் தொழிலாளர் 114 பேர் பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 25/2014 இற்கு அமைய நிரந்தரமாக்கப்பட்டு இருந்தன.

அத்தியாயம் 04
செயற்திறன் குறிகாட்டிகள்

4.1. நிறுவனத்தின் செயலாற்றுகை சுட்டிகள் (செயற்திட்டத்தின் அடிப்படையில்)

4.1.1. ஏற்றுமதி விவசாய பயிர் அபிவிருத்தி வேலைத் திட்டம்

2021 ஆம் ஆண்டு ஏற்றுமதி விவசாய பயிர் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் பொது திறைசேரியின் ஊடாக பெற்றுக் கொடுக்கப்பட்ட ரூபா 700.00 மில்லியன் மற்றும் அமைச்சின் ஊடாக பெற்றுக் கொள்ளப்பட்ட ஒதுக்கீட்டின் ஊடாக ஏற்றுமதி விவசாய வலய வேலைத்திட்டம் மஞ்சள் மற்றும் இஞ்சி செய்கை வேலைத்திட்டம் மற்றும் நீர்ப்பாசன வழங்கள் அலகு வேலைத்திட்டம் போன்ற அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் 2021 ஆம் ஆண்டில் திணைக்களத்தின் ஊடாக செயற்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டது. இதற்கும் மேலாகஅமைச்சின் ஒதுக்கீட்டின் கீழ் 432-2-3-7-2507 செலவுவிடயத்தின் ஊடாகரூபா 30.00 மில்லியன் தொகைஒதுக்கீடுநீர் வழங்கள் வளையமைப்புமுறைஒன்றினைஸ்தாபிக்கும் பொருட்டுதிணைக்களத்திற்குபெற்றுக் கொடுக்கப்பட்டது. அந்தஒதுக்கீட்டின் கீழ் கஸ்நேவ மத்தியநாற்றுமேடை, மாத்தலைமத்தியநாற்று மேடைஎன்பவற்றிற்குநீர் மூலங்களை ஸ்தாபிக்கும் பொருட்டும்மற்றும்கருத்திட்டத்தைபூரணப்படுத்தும்பொருட்டும்தேவையானவைகொள்வனவுசெய்யப் பட்டன. மாத்தலைமத்தியநாற்றுமேடைகினறுஒன்றும் நிர்மானிக்கப்பட்டது.

வேலைத்திட்டம்	ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு	இலக்குகள்
பயிர்ச் செய்கை பரப்பளவை மேம்படுத்தும் வேலைத்திட்டம்	405.7	• ஹெக்டேர் - 1690 • சிறு அளவிலான வீட்டுத் தோட்ட கன்றுகள் - 3,239,644 • வீட்டுத் தோட்ட கன்றுகள் -154,292 • கூட்டு கிராமங்கள் - 50 • மஞ்சள் மற்றும் இஞ்சி மதலீட்டு கொடை வேலைத்திட்டம் 389 ஹெக் • பாக்குச் செய்கை – பாக்கு கன்றுகள் 1,112,000
மத்திய நாற்று மேடை அபிவிருத்தி	27.5	• பாக்கு விதை – 100,000 • சாதிக்காய் விதை – 100,000 • விதை கொள்வனவு செய்தல் • பொலிதீன் பேக் மற்றும் ஏனைய உள்ளீடுகள் • பாத்திர ஊடகம் கொள்வனவு • நீர் வழங்கள் வளையமைப்பு தாய் தாவர தோட்டம் ஸ்தாபித்தல்
ஏற்றுமதி விவசாய பயிர் திறன் மேம்படுத்தும் வேலைத்திட்டம்	126.7	• கைவிடப்பட்ட கன்று பெற்றுக் கொடுத்தல் - 2580 ஹெக். • விலங்குகளின் பாதிப்புக்கள் தவிர்த்தல் - 90 அலகுகள். • சிறுநீர்ப்பாசனம் - 55 அலகு • பெறுமதி சேர்க்கப்படட வெலைத்திட்டம்
சேதன கிராம வேலைத்திட்டம்	82.0	• ஹெக்டேயர் - 115 • அறுவடைக்கு பின்னரான தொழில்நுட்ப உபகரணம் - 600 • சந்தை மேம்பாட்டு வேலைத்திட்டம் - 28 • மென் பொருள் அபிவிருத்தி – 25 • சேதனச் சான்றிதழ் - 05 • GMP/GAP/ISO/BRC - 10
ஊடக மற்றும் தொடர்பாடல்	32.1	• துண்டுப் பிரசுரம் போஸ்டர்கள் 300,000 • கண்காட்ச்சிகள் 05 • தகவல் தொடர்பாடல் 3600
திறன் அபிவிருத்தி	5.0	• உழவர் பயிற்சி 1,115 • கள நாட்கள் 145 • உத்தியோகத்தர் பயிற்சி 22

		• கருத்தரங்குகள் 11 • பயிற்சி மாத்தரை கறுவா ஆராய்ச்சி நிலையம் - 50
நிர்வாகச் செலவு	21.0	
மொத்த ஒதுக்கீட்டு அளவு	700.00	

புதிய அபிவிருத்தி வேலைத் திட்டம் கொழும்பு, கம்பஹா, களுத்துரை, காலி, மாத்தரை, ஹம்பந்தோட்டை கண்டி, மாத்தளை, நுவரெலியா, குருணாகலை, கேகாலை, இரத்தினபுரி, பதுளை, மொனராகலை, அனுராதபுரம் மற்றும் பொலன்னறுவை போன்ற 17 மாவட்டங்களில் 2021 ஆம் அண்டும் தொடராக பெிவிருத்தி வேலைகள் செயற்படுத்தப்பட்டன. அதற்கு அமைய ஏற்றுமதி விவசாய பயிர்ச் செய்கை நடுகை பரப்பளவை அதிகரிக்கும் நோக்கில் செயற்படுத்தப்படுகின்ற புதிய அபிவிருத்தி பயிர்ச் செய்கை அபிவிருத்தி வேலைத்திட்டத்தின்கீழ் கறுவப்பட்டை, மிளகு, சாதிக்காய், கிராம்பு, கொக்கோ, கோப்பி, ஏலக்காய், போன்ற ஏற்றுமதி விவசாய பயிர்கள் 1635.15 ஹெக்டேயரில் புதிய நடுகை நிலப்பரப்பின் கீழ் பயிரிடப்பட்டன,

இல்லப் பயன்பாட்டின் பொருட்டு தேவையான வாசனைத்திரவிய வீட்டுத் தோட்டங்களின் ஊடாக உற்பத்தி செய்து கொள்ளல், வீட்டுத் தோட்டத்தின் மூலம் சிற்றளவிலான பொருளாதார பயிர்ச் செய்கைகளை உருவாக்கல், பேரளவில் பயிர் செய்கைப் பண்ணப்படாத ஏற்றுமதி விவசாய பயிர் கூட்டுக் கிராமமாக பயிர் செய்கை மேற்கொள்ளல், நிலத்தின் திறனை மேம்படுத்தும் பொருட்டு ஏற்றுமதி விவசாய பயிர் சிறிய அளவில் மேம்படுத்தும் வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டது.

மேலும், 0.25 ஏக்கருக்கும் குறைவான ஒரு சிறிய வீட்டுத் தோட்டத்தின் உச்ச பொருளாதார நன்மைகளை அதிகரிக்கும் நோக்கத்துடன்சிறிய வீட்டுத் தோட்டத் திட்டம் மற்றும் செழிப்புள்ளவீட்டுத் தோட்டத் திட்டத்தின்கீழ்3,108,129 மரக்கன்றுகள் மற்றும்செழிப்புள்ள வீட்டுத் தோட்ட செய்கையின் கீழ் 120,541 மரக்கன்றுகள் இலவசமாகவழங்கப்பட்டன.

சிறிய வீட்டுத்தோட்ட வேலைத் திட்டம்

பயிர்	வழங்கப்பட்ட கன்றுகளின் எண்ணிக்கை
கறுவா	2,755,123
கிராம்பு	1,820
கோப்பி	4,238
மிளகு	340,240
குரக்காய்	1,950
சாதிக்காய்	4,758

செழிப்புள்ள வீட்டுத்தோட்ட வேலைத் திட்டம்

பயிர்	வழங்கப்பட்ட கன்றுகளின் எண்ணிக்கை
கறுவா	2100
கிராம்பு	06
கோப்பி	25,776
மிளகு	90,504
குரக்காய்	2,134
சாதிக்காய்	1
பாக்கு	20

கொத்தனிக் கிராம வேலைத்திட்டம்

இந்த வேலைத் திட்டத்தின் கீழ் ஒரு கிராமம் அல்லது பல கிராமங்களை ஒருங்கிணைத்து கூட்டு கிராமமாக, ஒரு கூட்டு கிராமத்தின் பொருட்டு ஆகக் குறைந்தது 25 உறுப்பினர்கள் இருக்குமாறு கூட்டுக் கிராம வேலைத்திட்டம் செயற்படுத்தப்படுகின்றது. இங்கு குழுவாக ஒழுங்கமைக்கப்பட்டு கன்று வினியோகிப்பது முதல் அறுவடை செய்து சந்தைப்படுத்தும் சந்தர்ப்பம் வரை முறையான திட்டமிடல் தயாரிக்கப்பட்டு விவசாயிகளை உயிர்ப்பிப்பதற்கும் மற்றும் சந்தைகளை ஒருங்கிணைப்பு செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றன. இந்த கூட்டுக் கிராம வேலைத்திட்டத்தின் கீழ் கிராமங்கள் 98 இன் பொருட்டு ஏற்றுமதி விவசாய பயிர் கன்றுகளை பெற்றுக் கொள்ள வேண்டும்.

பயிர்	வழங்கிய கன்றுகளின் எண்ணிக்கை
ஏலம்	12,400
வெனிலா	81,685
சாதிக்காய்	10,537

மஞ்சள் இஞ்சி செய்கை அபிவிருத்தி வேலைத்திட்டம்.

அரசினால் மஞ்சள் பயிர் இறக்கமதி செய்தல் மற்றம் மஞ்சள் செய்கையின் பொருட்ட நிலவும் கேள்வி அதிகரித்துச் செல்லல் போன்ற காரணங்களினால் 2021 ஆம் அண்டு இறக்குமதி விவசாய பயிர் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் மஞ்சள் மற்றம் இஞ்சி செய்கை மேம்பாட்டு வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டது. இங்கு தொடரான பயிர்ச் செய்கை நிலப்பரப்ப ஆகக் கூடியது 01 ஹெக்டேயரும் ஆகக் கறைந்தது 10 கிலோ கிராம் முதல் 300 கஜிலே கிராம் வரையிலும் நிரம்பல் செய்யப்படுகின்ற தரமான மஞ்சள் விதைக் கிழங்கு 01 கிலோ கிராமின் விலை ரூபா 150.00 அடிப்படையில் மஞ்சள் செய்கையாளர்களுக்கு முதலீட்டு கொடை நிதி வழங்கப்பட்டது. அதற்கு அமைய ஏற்றுமதி விவசாய திணைக்களத்திற்க உரிய சகல மாவட்டங்களிலும் மஞ்சள் 661.10 கிலோ கிராம் செய்கைப் பண்ணப்பட்டது.

வீட்டுத் தோட்டச் செய்கையின் பொருட்டு மஞ்சள் கன்றுகள் பெற்றுக் கொடுக்கும் வேலைத்திட்டம் திணைக்களத்தின் ஊடாக செயற்படுத்தப்பட்டதுடன் இல்லப் பணன்பாட்டின் பொருட்டு தேவையான மஞ்சள் இஞ்சி தேவைப்பாட்டை தமது வீட்டுத் தோட்டத்திலேயே உற்பத்தி செய்து கொள்ளல் மற்றும் நகர மற்றும் அரை நகர இல்லங்களக்க முன்னுரிமை பெற்றுக் கொடுத்து ஒரு இல்லத்தின் பொருட்டு தேவைக்கு ஏற்ப மஞ்சள் கன்றகள் ஆகக் கூடியது 05 உம் இஞ்சிக் கன்றுகள் ஆகக் மூடியது 05 வரையிலும் இலவசமாக வழங்கப்பட்டது. அதற்கு அமைய இந்த வேலைத்திட்டத்தின் கீழ் மஞ்சள் கன்றுகள் 5,222,527 வினியோகிக்கப்பட்டது.

ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் ஊடாக பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள ஒதுக்கீட்டின் கீழ் மஞ்சள் மற்றும் இஞ்சி விதை தோட்டங்கள் ஸ்தாபிக்கும் வேலைத்திட்டம் ஒன்று செயற்படுத்தப்பட்டது. ஆகக் கூடியது 01 ஹெக்டேயர் வரை உரிய தரமான மஞ்சள் விதை அளவு ஏற்றுமதி விவசாய திணைக்களத்தினால் உரிய நிறுவனங்களுக்குஇலவசமாக வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் அவற்றின் தொழில்நுட்ப ஆலோசணைகள் மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகள் அந்நிறுவனத்தினால் பெற்றுக் கொடுக்கப்பட்டது. இந்த வேலைத் திட்டத்தின் கீழ் இஞ்சி மற்றும் மஞ்சள் விதைகள் தட்டுப்பாடு இன்றி வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் மஞ்சள் செய்கை அரசாங்க மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில் விஸ்தரிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

2021 ஆம் ஆண்டு பாக்குச் செய்கை வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டதுடன் சூழல் பாதுகாப்பு செய்யும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டது. இந்த பாக்குச் செய்கை மேம்பாட்டு வேலைத்திட்டத்தின் கீழ் பாக்கு கன்றுகள் 1,099,420 அளவு வீட்டுத் தோட்டங்கள், அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் மற்றும் தோட்டக் கம்பனிகளுக்கும் வினியோகிக்கப்பட்டது.

உயர்தரமான நடுகை பொருட்களைசெய்கையாளர்களுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்டு தாவர உற்பத்தி வேலைத் திட்டம் இந்த திட்டங்களுக்கு இணையாக ஆரம்பிக்கப்பட்டது. திணைக்கள வேலைத்திட்டங்கள் பொருட்டு தேவையான வருடாந்தகன்றுகளின் தேவைகள் திணைக்களத்தால் நேரடியாக பராமரிக்கப்படுகின்ற 12 நாற்றுமேடைகள் மற்றும் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட தனியார் நாற்றுமேடைகளால் பெற்றுக்கொள்ளப்படுகின்றன. இந்த திட்டத்தின் கீழ் உட்கட்டமைப்பு வசதிகளை செய்து கொடுத்தல், நடுகை பொருட்கள் மற்றும் நடுகை ஊடகம் வழங்குதல் மற்றும் வருடாந்த கன்றுகளின் தேவைப்பாட்டையும் பூர்த்தி செய்வதோடு 739 தனியார் நாற்றுமேடைகளின் கட்டுப்பாடுகள் மற்றும் வழிகாட்டுதல்கள் போன்றன இவ்வேலைத்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டன. 2021 ஆம் ஆண்டில் திணைக்கள நாற்றுமேடைகளில் இருந்தான நாற்றுக்களின் உற்பத்தி 17.49 மில்லியன் நாற்றுகள் ஆகும்.

ஏற்றுமதி விவசாய பயிர்ச் செய்கையாளர்களின் உச்சத்திறனை பெற்றுக் கொள்வதன் பொருட்டு நிலவும் செய்கையாளர்களின் செயற்திறனை மேம்படுத்துவது அத்தியவசியமாகும். இந்த வேலைத்திட்டத்தின் ஊடாக நடுகை அலகு நில அளவினை பெற்றுக் கொண்டு அறுவடை அளவினை பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கு அமைய 2021 ஆம் ஆண்டு உற்பத்தித் திறனை மேம்படுத்தும் வேலைத்திட்டம் தொடராக செயற்படுத்தப்பட்டது. தனிமைப்படுத்தப்பட்ட அல்லது விடுபட்ட பகுதிகளில் நடுகை மேற்கொள்வதற்காக தேவையான நாற்றுக்கள் வழங்கப்பட்டன. அதற்கு அமைய காலியாக இருந்த பகுதிக்கான நடுகை திட்டத்தின் கீழ் 2291.17 ஹெக்டேர் நிலப்பரப்பில் மீள்செய்கை மேற்கொள்ளப்பட்டது.

எதிர்பாராத சுற்றுச்சூழல் காலநிலை மாற்றங்களினால் ஏற்படும் பாதிகப்புக்களில் இருந்தும் மற்றும் வன விலங்குகளினால் ஏற்படுகின்ற பாதிப்புக்களில் இருந்தும் பயிர்ச் செய்கையாளர்களது பயிர்களைப் பாதுகாக்கும் பொருட்டு திணைக்களத்தினால் 50% செலவில் 56அலகு சிறுநீர்ப்பாசன முறைகள் மற்றும் 56 பாதுகாப்பு வேலிகள் பயிர்ச் செய்கையாளர்களுக்கு வழங்கப்பட்டன.

சேதன பயிர்ச் செய்கை கிராம வேலைத்திட்டத்தின் கிழ் சேதன செய்கை 47.5 ஹெக்டேயர் உம் புதிதாக 2020 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட 59.8 ஹெக்டேயர் பொருட்டு இரண்டாம் தவைனை செலுத்தப்பட்டது. தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள சேதனக் கிராமங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ள யடவத்தை, புஸ்செல்ல மற்றும் திவுலபிடிய சேதன விவசாய ஒழுங்கமைப்புக்கள் 03 இன் பொருட்டு சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளத்தக்க சேதனச் சான்றிதழ் பெற்றுக் கொள்வதன் பொருட்டு ஏற்றுமதி விவசாய திணைக்களம் உரிய தொழில்நுட்பம் மற்றும் நிதி பங்களிப்புக்களையும் பெற்றுக் கொடுத்தது. சிறந்த விவசாய முறைமையின் பொருட்டு தரம் மற்றும் பயன்பாட்டுக் கோவைகள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் 429 விண்ணப்பங்கள் பொருட்டு கணக்காய்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சேதன சான்றுபடுத்தல் வேலைத்திட்டத்தின் கீழ் ஏற்றுமதி விவசாய பயிர் உற்பத்தி நிறுவனம்இரண்டின் பொருட்டு HACCP, ISO 22000 மற்றும் BRCGS சான்றிதழ்கள் பெற்றுக்

கொடுக்கும் பொருட்டு தேவையான தொழில்நுட்ப மற்றும் நிதி பங்களிப்புக்கள் வழங்கப்பட்டன. அதற்கும் மேலாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள் 11 உடன் சேதனச் சான்றிதழ் கொண்டுள்ள விவசாய ஒழுங்கமைப்புக்களுடன் தேவையான இணைப்புச் செய்தல் மற்றும் தணிப்பட்டஆலோசணை சேவைகள் 134 உம் மேற்கொள்ளப்பட்டன.

இலங்கை வாசனைத் திரவிய பொருட்களின் பொருட்டு உள்நாட்டில் போலவே உலகளாவிய சந்தையிலும் அதிகளவில் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக பயனுள்ள விதத்தில் பயன்படுத்திக் கொள்வதற்கு ஒரு உபாயமாக தற்போது புதிதாக உருவாகி உள்ள சந்தை வாய்ப்புகளை உச்ச அளவில் பயன்படுத்திக் கொள்வதன் மூலம் ஏற்றுமதி வருவாயை அதிகரிப்பதற்கான ஒரு மூலோபாயமாகபெறுமதிசேர்க்கப்பட்ட உற்பத்திகள் அடையாளம் காணப்பட்டதுடன் அதன் கீழ் மிகவும் தரமான உற்பத்திகளை சந்தைக்கு அறிமுகம் செய்து வைத்தல், அதற்காக சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட தரச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. அத்துடன் சான்றளிக்கப்பட்டசேதன பண்ணைகள் நிறுவப்பட்டது. பதனிடல் நிலையங்கள் மற்றும் அறுவடைக்கு பின்னரான தொழில்நுட்பத்தை உயர்தரமான அளவில் பேனுவதன் பொருட்டு இயந்திர உபகரணங்கள் வழங்கப்பட்டன.

அறுவடைக்கு பின்னரான தொழில்நுட்ப அபிவிருத்தி வேலைத்திட்டம்.

- அறுவடைக்குப் பின்னரான முதலீட்டு கொடை திட்டத்தின் கிழ் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கறுவா பதனிடல் நிலையங்கள் 58 உம், ஏனைய பதனிடல் நிலையங்கள் 04 உம் கேந்திர பதனிடல் நிலையங்கள் 09 இன் பொருட்டும் முதலீட்டு கொடை பெற்றுக் கொடுக்கப்பட்டன. அறுவடைக்கு பின்னரான தொழில்நுட்ப இயந்திர உபகரணங்களின் ஊடாக அறுவடைகளில் உச்ச தரத்தினை பெற்றுக் கொள்ளல் மற்றும் மனித சக்தியை குறைவாக பயன்படுத்துவதன் ஊடாக செலவினை குறைக்கும் பொருட்டு இயந்திர உபகரணங்கள் 396 உம் மற்றும் கறுவா எண்ணைய் பிரித்தெடுப்பு அலகுகள் 18 இன் பொருட்டும் கொடை பெற்றுக் கொடுக்கப்பட்டன.

உபகரண வகை	எண்ணிக்கை
உலர்த்தி	47
மிளகு விதை ஒதுக்கீட்டு இயந்திரம்	64
பிளான்சர்	03
வெள்ளை மிளகு உற்பத்தி இயந்திரம்	02
வாசனைத் திரவிய அறைப்பு இயந்திரம்	11
கோப்பித் தோல் அகற்றும் இயந்திரம்	01
கோப்பி வருத்தல் இயந்திரம்	01
மஞ்சள் ஸ்ரீமர்	5
இஞ்சி மஞ்சள் துண்டாக்கல் இயந்திரம்	13
மஞ்சள் கழுவும் இயந்திரம்	01
மஞ்சள் பல்பர்	01
மஞ்சல் பொலிசர்	03
ஈரமாணி	01
பொலிதீன் சீலர்	06
உலர்த்துகின்ற கமத்தைகள்	05
கருங்கா சிலைசர்	01
கருங்கா தோல் நீக்கி இயந்திரம்	01
குரக்காய் ஈர அரைப்பு இயந்திரம்	01
புல் வெட்டும் இயந்திரம்	63
அலுமினிய ஏணி	161
செய்கை நிலத்தில் கன்று நடுகைக்கான குழி தோண்டும் இயந்திரம்	04
மிளகு நிழல் வெட்டும் உபகரணம்	01

- நட்டில் நிலவிய கொரோனா தொற்றுநோய் நிலமை காரணமாக பயிர்ச் செய்கை மற்றும் பயிர் செய்கை சார்ந்த உற்பத்தி தொடர்பாகமக்களது ஈர்ப்பை தொடராக பேனுவதன் பொருட்டும் மற்றும் விவசாய தொழில்நுட்பத்தை விவசாயிகளுக்கு கொண்டு செல்வது மிகவும் கட்டாயத் தேவையாகும். அதன் பொருட்டு சந்தை மேம்பாட்டு வேலைத்திட்டங்கள் மற்றும் ஊடக வேலைத்திட்டங்கள் 2021 ஆம் ஆண்டு நடாத்தப்பட்டது. வருடாந்தம் நடாத்தப்படுகின்ற தூயகறுவா கொண்டாட்டம் தொடராக மட்டுப்படுத்தப்பட்ட திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் கறுவாச் செய்கையாளர்களது பங்கு பற்றுகையுடன் காலி, சீனிகம தேவாலய வளாகத்தில் மிக விமர்சையாக கொண்டாடப்பட்டது.

- ஏற்றுமதி விவசாய பயிர்கள் தொடர்பில் தொழில்நுட்ப அறிவு மற்றும் ஏற்றுமதி பயிர்கள் மீது அதிகமான மக்களை ஈர்ப்பதற்காக ஊடகங்கள் பயன்படுத்திக் கொள்வதானது எளிதான தகவல் தொடர்பு வழிமுறையாக இருப்பதால் திணைக்களத்தின் அனைத்து ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகள் தொழில்நுட்ப விடயங்கள் ஆகியன உழவர் மக்களுக்கு தொடர்பாடலை இலகுபடுத்தும் பொருட்டு தேசிய ரூபவாஹினி ஒலிபரப்பின் கீழ் "செங்கவுனு கஹவுனு" எனும் பெயரில் அறிக்கை வேலைத் திட்டங்கள் 23 மற்றும் "ரன்மசு உயன" எனும் பெயரில் நிகழ்ச்சிகள் 23 உம் ஒலிபரப்பு செய்யப்பட்டன. வானொலி நிகழ்ச்சிகளின் கீழ், கந்துராட்ட, ருஹுனு, வர்த்தக, ரஜரட்ட, மற்றும் வடமேற்கு வானொலி நிகழ்ச்சிகளின் கீழ் "ரச ஜனனி" நிகழ்ச்சிகள் 51 ஒலிபரப்பப்பட்டன, மேலும் சுயாதீன சேவையின் கீழ் "ஹரிதமங்கல"நிகழ்ச்சிகள் 16 ஒலிபரப்பப்பட்டன. மேலும் ஏற்றுமதி விவசாய பயிர் ரூபவாஹினி அறிவித்தல்கள் 08 உம் ஒலிபரப்பப்பட்டனஅத்துடன் செய்தித்தாள் அறிவித்தல்கள் 17 உம் ஒவ்வொறு வெள்ளிக்கிழமையும் தினமின பத்திரிகையில் வெளியிடப்படுகின்ற ஏற்றுமதி விவசாய பயிர் விலை தொடர்பான குறிப்பு 47 உம், தொழில்நுட்ப புத்தகங்கள் 1477 உம் அச்சிடப்பட்டன. போஸ்டரகள் 304 உம் ஏற்றுமதி விவசாய பயிர் தொடர்பான துண்டுப் பிரசுரங்கள் 235,000 உம் அச்சிடப்பட்டன. அத்துடன் 1920 எனும் தொடர்பு இலக்கத்துடன் விவசாய ஆலோசனை சேவைகள் 5585 வாடிக்கையாளர்களுக்கு ஏற்றுமதி பயிர்கள் குறித்து தொலைபேசி ஆலோசனை சேவைகள் வழங்கப்பட்டன.
- மாத்தளையில் அமையப் பெற்றுள்ள சேவை மீளாய்வு பயிற்சி நிலையத்தின் ஊடாக திணைக்கள உத்தியோகத்தர்கள் 40 பேரும் திணைக்களமல்லாத உத்தியோகத்தர்கள் 151 பேரும் ஏற்றுமதி விவசாய பயிர் தொடர்பான பயிற்சி பாடநெறிகள் நடாத்தப்பட்டன. மேலும் நிலவிய கொரோனா தொற்றுநோய் நிலமை காரணமாக மக்களை ஒன்று சேர்ப்பது மட்டுப்படுத்தப்பட்டதன் காரணமாக பயிற்சி நிலையங்களின் ஊடாக Zoom தொழில்நுட்பத்தின் கீழ் நிகழ்நிலை முறைமையின் ஊடாக விவசாய தொழில்நுட்ப நிபுனர்களின் விரிவுரைகள் எனும் பெயரில் திணைக்கள மற்றும் திணைக்கள வளவாளர் உத்தியோகத்தர்களது பங்களிப்புடன் பயிற்சி வேலைத் திட்டங்கள் வாரநாட்களின் சகல வெள்ளிக் கிழமையும் மு.ப.10.00 மணி முதல் மு.ப. 12.00 மணி வரை நடாத்தப்பட்டது. அத்துடன் அங்கு 1250 பயனாளிகள் பொருட்டு தேவையான ஆலோசணை சேவைகள் வழங்கப்பட்டன.

  மாத்தரையில் அமையப் பெற்றுள்ள கறுவா ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையங்களின் ஊடாக கருவாப்பட்டை திறன் மேம்பாட்டு கருத்திட்டத்தின் கீழ் சிறந்த விவசாய நடைமுறைகள் (GAP) gapw;rp வேலைத் திட்டங்கள் 02 உம். சிறந்த உற்பத்தி

நடைமுறைகள்(GMP)பயிற்சி வேலைத் திட்டங்கள் 02 உம் மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகள் பயிற்சி வேலைத்திட்டமும் 2021 ஆம் ஆண்டு நடாத்தப்பட்டது. அத்துடன் அங்கு 117 பயனாளிகள் பொருட்டு பயிற்சி சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டன.

விஷேட சுட்டிகள்	எதிர்பார்த்த முடிவுப் பொருட்களின் விகிதம் (%) ஆக உண்மை முடிவுப் பொருட்கள்		
	100% - 90%	100% - 90%	50%-74%
பயிர் செய்யப்பட்ட ஹெ.அளவு	96.75	-	-
செய்கையின் பொருட்டு வழங்கப்பட்ட நாற்றுக்களின் எண்ணிக்கை	100	-	-
அபிவிருத்தி செய்யபட்ட மத்திய நாற்று மேடைகளின் எண்ணிக்கை	100		-
காலியாக உள்ள இடங்களில் நடுவதன் ஊடாக திறனை மேம்படுத்திய நில அளவு	-	88.8	-
ஸ்தாபிக்கப்பட்ட சிறு நீர்ப்பாசனத் திட்டங்களின் அளவு	101	-	-
ஸ்தாபிக்கப்பட்ட விலங்கு சேத தடுப்பு வேலிகளின் எண்ணிக்கை	-	88.9	-
சேதன பயிர் செய்கை நில ஹெக்டேயர்களின் அளவு	93.3		-
வினியோகிக்கப்பட்ட அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்ப உபகரணங்களின் அளவு	91	-	-
சிறு அளவிலான வீட்டுத் தோட்டங்கள்	95		
வீட்டுத் தோட்டங்களுக்கான கன்றுகள்			78
கூட்டுக் கிராம வேலைத்திட்டம்	108		
மஞ்சள் மற்றும் இஞ்சி முதலீட்டு கொடை வேலைத்திட்டம்			
பாக்கு செய்கை	98		
சிறு நீர்ப்பாசன வேலைத்திட்டம்	101		
அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்ப உபகரணங்கள்			80
அச்சு ஊடகங்கள்	100		
துண்டுப் பிரசுரங்கள், போஸ்டர்கள்			78
தொடர்பாடல்	155		

- ஏற்றுமதி விவசாய பயிர் ஆராய்ச்சி மற்றும் ஒருங்கிணைந்த நோய் மற்றும் பீடை முகாமை (IPM) வேலைத் திட்டத்தின் ஊடாக கவனம் செலுத்தப்படுவது யாதெனில் ஏற்றுமதி விவசாய பயிரின் உச்ச உற்பத்தியை பெற்றுக் கொள்ளல் மற்றும் உச்ச தரத்தை அடைந்துக் கொள்ளல் ஆகும். இந்த இலக்கினை அடைந்து கொள்வதற்கு ஆராய்ச்சி நிலையங்கள் 08 இன் ஊடாக மேற்கொள்ளப்பட்டது.

- 2021 ஆம் ஆண்டு கோவிட் 19 தொற்று நோய் நிலவிய போதிலும் 154 ஆராய்ச்சிகள் ஏற்றுமதி விவசாய திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆராய்ச்சிகளுக்கு இடையே அதிகமான ஆராய்ச்சிகள் அதாவது 42 ஆராய்ச்சிகள் கறுவா பயிர் அடிப்படையிலும் இரண்டாவதாக அதிக ஆராய்ச்சிகள் அதாவது 28 ஆராய்ச்சிகள் மிளகு பயிர் தொடர்பாகவும் அமைந்திருந்தது. ஏனைய ஆராய்ச்சிகள் கோப்பி, ஏலம், சாதிக்காய், இஞ்சி, மஞ்சள், வெற்றிலை, குரக்காய் கொக்கோ, வெனிலா, கிராம்பு நெட்டி மற்றும் பாக்கு போன்ற பயிர்கள் தொடர்பில் ஆராய்சி மேற்கொள்வதை இலக்காகக் கொண்டு இருந்தது.

